திருவள்ளுவர் ஆண்டு 2037

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 100 பகுதி : 01 சனவரி 2006

"தமிழர் சிறக்கவும் தமிழ்ப்பயிர் தழைக்கவும்
கொண்ட நின்னெண்ணம் குறைவில தாகுக!
வாழிய பெரும! வாழிய பெரும!
ஊழி ஊழி வாழிய சிறந்தே"

-த.வே.உமாமகேசுவரன்

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

சனவரி-06

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு. நா.குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்., | செயலாளர் |
| திரு. மா. சங்கரபாண்டியன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திரு. டாக்டர் ந.சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S. (Uro) F.I.C.S., | உறுப்பினர் |
| திரு. ச.பரங்குன்றம் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. க.முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திரு. இரா.கண்ணன் | உறுப்பினர் |
| திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி பி.இ., | உறுப்பினர் |
| திரு. எஸ்.எம்.நாகராசன் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. பி.வீரணன் | உறுப்பினர் |

## கல்லூரிக் குழு

| | |
|---|---|
| டாக்டர் திரு.ந.சேதுராமன், M.S.,M.Ch.(URO).,M.N.M.S.(URO).,FICS., | தலைவர் |
| திரு. மா. சங்கரபாண்டியன், பி.ஏ.பி.எல்., | செயலாளர் |
| திரு. இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்., | உறுப்பினர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. ச.பரங்குன்றம், பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி, பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. மா.ச.கார்த்திகேய பாலாஜி, பி.இ., | உறுப்பினர் |
| திரு. க.முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திருமதி. வாசுகி ராஜா எம்.எஸ்.சி., எம்.ஃபில்., | உறுப்பினர் |
| இராஜா. திரு. முருகதாஸ் தீர்த்தபதி | உறுப்பினர் |
| திரு. இரா.கண்ணன் | உறுப்பினர் |
| திரு. மா.ச.மாரியப்ப முரளி பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| டாக்டர் திரு. க சின்னப்பா பி.எச்.டி., முதல்வர் | உறுப்பினர் |
| டாக்டர் திருமதி. வீ.காந்திமதி பி.எச்.டி., இணைப்பேராசிரியை | உறுப்பினர் |
| டாக்டர் திருமதி. செ.தனலெட்சுமி பி.எச்.டி., இணைப்பேராசிரியை பல்கலைக்கழக உறுப்பினர் | உறுப்பினர் |

# செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 100
பகுதி : 01
*சனவரி* 2006

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2037




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 ★ THE MADURAI TAMIL SANGAM ★

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 6 | ரூ. |


ஆசிரியர் இரா. **அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர் – மதுரைத் தமிழ்ச்சங்கம்.

பதிப்பாசிரியர் இரா. **சதாசிவம்** எம்.ஏ., எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

# பொருளடக்கம்

**இதழ்மணம்** 382

**திறனாய்வு : பாராட்டும்! தாக்குதலும்!** 384

*பேராசிரியர் து.மூர்த்தி,*
வார்சா பல்கலைக்கழகம், போலந்து.

**இரகு வம்சமும், இராமாவதாரமும்** 399

முனைவர். பெ.சுயம்பு

**சிந்தாமணி கூறும் அறம்** 413

தி.வே.கோபாலய்யர்

# இதழ்மணம்

போலந்து நாட்டில் வார்சா பல்கலைக்கழகத்தில் தகைமைத் தமிழ்ப்பேராசிரியராக பணியாற்றும் முனைவர் ***சு.மூர்த்தி*** அவர்கள் ***திறனாய்வு : பாராட்டும்! தாக்குதலும்!*** என்னும் இலக்கியத் திறனாய்வுக் கட்டுரையை எழுதியுள்ளார்கள்.

இக்கட்டுரையில் விமர்சனக் கலை தடம்புரண்டு கிடப்பதை ஆய்வுநோக்கில் விமர்சித்துள்ளார். பல்கலைக்கழக வளாகங்களில் பாராட்டுமுறை பட்டடைகள் உருவாகி டாக்டர் பட்டம் பெறுவதற்கு திபுதிபு என ஆய்வாளர்கள் நுழைந்து ஆராய்ச்சி உலகை டாக்டர் பட்டங்களுக்கான பட்டறைகளாக மாற்றிக்கொண்ட அவலங்களை சுட்டிக்காட்டி ஆய்வு நெறிமுறைகளை அறிவுறுத்துவது கல்வியாளர்களும் மாணவர்களும் கல்விகற்கும் நெறி தேர்ந்து கற்க வேண்டியதன் அவசியத்தை சிந்திக்கத் தூண்டுகிறது. ஆய்வேடுகள் திறனாய்வு என்ற பெயரில் விளம்பர வரிகளை எழுதிக்குவித்தன என்ற செய்தியும் முரண்பட்ட காலக்கோட்பாடுகளை நினைவிற்கொள்ளாமல் கால, இட, கருத்து வழுக்கள் நிறைந்த திறனாய்வு அகவய ஆசைகளின் வெளிப்பாடு என்பதும், தன் விருப்பக் கொள்கையை நுழைப்பது தவறு திறனாய்வன்று போன்ற செய்திகள் மாணவர்கள் உளம் கொளத் தக்க உண்மைகளாகும். திறனாய்வு என்பது படைப்பின் கற்கை நெறியாக அமையவேண்டும். இலக்கியத்தை அதன் வேர்கள் சார்ந்தும் சமூகம் சார்ந்தும் பண்பாட்டின் இயங்கு நெறி சார்ந்தும் புரிந்துகொள்ள இடப்படும் வழித்தடமே திறனாய்வாகும் என ஆசிரியர் எடுத்துரைத்திருப்பது இலக்கியத்தைப் பயில்வதற்குரிய கல்வி சார்ந்த நெறிமுறையாகும். இதன் கண் கநாசு, முவா. சிதம்பர ரகுநாதன், இராமலிங்கம், வீராசாமி போன்ற ஆசிரியர்களின் விமர்சனப் பார்வை திறனாய்வுக்குள்ளாகின்றன. குறுந்தொகை, கம்பராமாயணம், பெரியபுராணம், பட்டுக்கோட்டை, சுரதா, கண்ணதாசன், கவிஞர் மீரா போன்ற இலக்கியங்கள் சுட்டப்பட்டுள்ளன. கல்வியாளர்களுக்கு இக்கட்டுரை மிக்க பயன்பாடுடையதாகும்.

திருச்செந்தூர் ஆதித்தனார் கல்லூரித் தமிழறிஞர் முனைவர் ***பெ.சுயம்பு*** அவர்கள் ***இரகுவம்சமும் இராமாவதாரமும்*** என்னும் கட்டுரை எழுதியுள்ளார்கள். வடமொழிக் காப்பிய பெரும்புலவர் காளிதாசனும், தமிழ்ப் பெருங்காப்பியப் புலவர் கம்பரும் ஒப்பிலக்கிய நோக்கில் திறனாய்வு செய்யப்பட்டுள்ளனர். காளிதாசனுடைய இரகுவம்சத்தில் இராமனுடைய படைப்பும், கம்பனில் இராமனுடைய படைப்பும் திறனாய்வு நோக்கில் சிந்திக்கப்பட்டுள்ளது. இராமன் காப்பியத் தலைவனாக முழுமை பெற்றிருப்பது கம்பனில் என்பதை ஆசிரியர் திறம்பட சுவைததும்ப விளக்கியுள்ளது கற்று இன்புறத்தக்கதாகும்.

செந்தமிழில் வெளிவரும் திறனாய்வு இலக்கிய இலக்கண ஆய்வுக்கட்டுரைகள் தமிழறிஞர்கள் மாணவர்கள் அனைவரின் கண்ணில் படவும் படிக்கவும் படவேண்டும். இதனைக் கண்ணுறும் வாசகர்கள் தாங்கள் கற்பதோடு மற்றவர்களும் பயன்பெற வேண்டி படிக்க, சந்தா அனுப்பப் பரிந்துரைப்பதையும் தமிழ்த் தொண்டாக மேற்கொள்ளலாம். இவ்விதழின் தேவையை உணரும் இலக்கிய உலகம் இதன் வளர்ச்சியில் ஒல்லும் வகை உதவ வேண்டுகிறேன்.

# திறனாய்வு : பாராட்டும் ! தாக்குதலும்

**து-மூர்த்தி,** தகைமைத் தமிழ்ப் பேராசிரியர்,
வார்சா பல்கலைக் கழகம், போலந்து.

I

ஓர் இலக்கியம் வெளிவந்தவுடன் அது படிப்போரால் பாராட்டப்படுகிறது ; அல்லது தூற்றப்படுகிறது ; அல்லது எந்தவிதமான கருத்துரைக்கும் உட்படுத்தப்படாமல் வெறுமனே வைக்கப்பட்டு விடுகிறது, அதாவது ஒதுக்கப்படுகிறது. ஆனால் அந்த இலக்கியத்தின் தரத்தை, வாழ்வைப் போற்றவோ, தூற்றவோ, இருட்டடிப்போ முடிவு செய்வதில்லை. காலமே முடிவு செய்கிறது. 'காலம்' என்ற சொல்லும் சார்புடைய 'relative term' சொல் ஆகும். குறிப்பிட்ட ஒரு காலத்தில் புகழோடு விளங்கக் கூடிய ஒரு நூல் வேறொரு காலத்தில் கேட்பாரற்றுப் போகலாம். சில நூல்கள் தொடர்ந்து நீண்ட காலம் வரை புகழோடு விளங்கலாம். எனவே காலம் என்பது அந்தந்தக் கால மக்கள் எனப் பொருள்படும். 'காலமக்கள்' என்பதும் பொதுவாக அனைத்து மக்களையும் குறிக்காது. ஒரு படைப்பு / இலக்கியம் குறிப்பிட்ட காலங்களில் எந்த வகை மக்களுக்குப் பயன்படுகிறது, யாருடைய முன்னேற்றத்திற்குப் பயன்படுகிறது, எந்த வாழ்க்கை முறையைப் பாதுகாக்கின்றது என்பனவற்றைப் பொறுத்தே 'காலத்தின் முடிவு' என்ற சொல்லைப் புரிந்து கொள்ள வேண்டும்.

"திறனாய்வு"க்குள் நுழையும் முன் வேறொரு சொல் இணையை விளக்க வேண்டும் : நல்ல/அழகான, இலக்கியம் X அவசியமான இலக்கியம்! இவ்வாறாக இருவகை இலக்கியம் இருக்கிறது என்றும், அவ்வாறு வேறுபடுத்திக்காட்டுவது திறனாய்வாளரின் வேலை என்றும் வாதாடுவோர் இருக்கிறார்கள். இந்தக் கட்டுரையாளர்க்கு 'அழகு மாயை' இல்லை! ; சமூக வாழ்வின் முன்னேற்றத்திற்குத் தேவையான அவசியமான படைப்பு நல்ல படைப்பாகவும் வெளிவர வேண்டும் என்பதே உடன்பாடு. இதை மீறி அவசியமற்ற படைப்பும் நல்ல படைப்பாக இருக்க முடியும் என்பது இயலாது. 'அழகு' என்பதைப் பிரித்து வைத்தோ, 'நல்ல' என்பதைத் தனிமைப்படுத்தியோ பார்க்க முடியாது, கூடாது. ஜெயகாந்தன், ஜெயமோகன், சுந்தர ராமசாமி போன்றோர் சமூகவாழ்வைப் பற்றியும் மனித இன மேம்பாடு குறித்தும் எவ்வளவுதான் பிற்போக்கான கருத்துடையவர்கள் என்றாலும் நல்ல/அழகிய படைப்புகளை

உருவாக்கியுள்ளார்கள் என்பது கவர்ச்சியான வாதம்! 'நல்ல' 'அழகிய' 'சிறந்த' 'கலைநயம் மிக்க' முதலான சொற்கள் சமூகமுன்னேற்றத்தோடு பிணைக்கப்பட்டுள்ளவை. எனவே அவர்கள் நாவல்/சிறுகதை எழுதுகிறார்கள் என்பது உண்மை! அவை 'அழகிய' நாவலாகக் கருதப்பட முடியாது!. எந்தவொரு 'போதையும்' சமூக மேம்பாட்டைப் பின்னுக்கு இழுப்பதால் அது அழகியதாக இருக்க வழியில்லை!. (மூர்த்தி:1978அ 1978ஆ, பக் 9–18) தால்ஸ்த்தோயை லெனினும் (1982) கார்க்கியும் பாராட்டியதைச் சான்றாக எடுத்துக்காட்டலாம். இந்த இருவருமே தால்ஸ்த்தோயை சகட்டுமேனிக்குப் பாராட்டிவிடவில்லை. தால்ஸ்த்தோய் நடுத்தர மக்கள் வாழ்க்கையை நடப்பியல்சார்ந்து அம்பலப்படுத்தியமையும், அழியும் நிலவுடைமையின் கொடு நகங்களை வெளிப்படுத்திய தன்மையும், ஆனால் அதே சமயம் ஜார்மன்னனுக்கு எதிரான சமூகப் புரட்சியோடு கைகோர்க்காத நிலையும் மார்க்சிம் கார்க்கி போன்றவர்களால் நன்கு இனம் பிரித்துக் (நாதன்:1970, பக் 12–20) காட்டப்பட்டுள்ளன.

திறனாய்வு என்பதே ஒரு படைப்பை எந்தவிதமான அடிப்படைகளுமின்றி வெகுவாகப் புகழ்தல், போற்றிப் பரவுதல் என்றே பொருள் கொள்ளப்படுகிறது. 'பாராட்டுமுறைத் திறனாய்வு' என்பதே திறனாய்வின் ஒரு வகையாகவும் கருதப்படுகிறது. இக்கருத்தை எடையிடுவதே இக்கட்டுரையின் நோக்கம். தெளிவாகச் சொல்லப்போனால், திறனாய்வு எப்படியெல்லாம் அமையக் கூடாது, மற்றும் அமைய வேண்டும் என்பதற்கான சில வரையறைகளைச் செய்ய இந்தக் கட்டுரை முயலுகிறது.

பாராட்டுமுறைத் திறனாய்வு என்பதற்கும், திறனாய்வில் பாராட்டுதல் என்பதற்கும் மிகுதியான வேறுபாடு உண்டு. ஒரு திறனாய்வாளனுக்குப் படைப்பாளனைவிட கூடுதலான சமூகப் பொறுப்புகளும் இலக்கியத் துடிப்புகளும் உள. அவன் விளம்பர முகவரோ 'கைமா' செய்பவனோ அல்லன்! படைப்புக்கும், சமூகத்திற்கும் இடையே செயல்படும் இலக்கிய மருத்துவன்.

தமிழிலக்கிய வளர்ச்சியில் திறனாய்வு என்பது ஒரு நிகழ்வு ஆகும் ; அல்லது வகைமை ஆகும். சமூக வளர்ச்சியில் ஏற்படும் பல நிகழ்வுகளை விமர்சிக்கும் போது, அந்தச் சமூக வளர்ச்சியில் ஊடுருவி நிற்கும் பல காரணிகளைக் கணக்கில் எடுக்க வேண்டும். அதைப் போலவே திறனாய்வைப் பற்றிப் பேசும்போது, அது வெறும் ஐரோப்பியச்

சட்டையை மட்டும் மாட்டிக் கொண்டு வெளிப்படவில்லை. உரையாசிரியர்கள் காலந்தொட்டு வரும் இலக்கியத்தை விளக்குதல், இலக்கண நுட்பம் கூறல், இலக்கியச் செவ்விகளை விதந்தோதுதல் போன்ற காரணிகளும், ஐரோப்பியக் காரணிகளும் ஒன்று கலந்தபோது தொடக்கத்தில் இரண்டு பிரிவுகள் / மரபுகள் ஏற்பட்டன 1) க.நா. சுப்பிரமணியம் பிரிவு, மற்றும் 2) சிதம்பர ரகுநாதன் பிரிவு.

"புதுசாக எழுதத் தொடங்குகிறவர்களை அநுதாபத்துடன் அணுகிப் பரிவுடன் விமர்சனம் செய்ய வேண்டும் என்று நமக்குள்ளே ஒரு சித்தாந்தம் தோன்றியுள்ளது. இது அசட்டுச் சித்தாந்தம். எந்த இலக்கிய ஆசிரியனுக்கும் இலக்கிய சிருஷ்டி சம்பந்தமாகப் பரிவோ யாருடைய அநுதாபமோ தேவையில்லை. நான் எழுதியது இலக்கியமானால் ஆயிரம்பேர் பரிவுகாட்டாவிட்டாலும் இலக்கியம் தான் எனக் கூறும் க.நா. சுப்பிரமணியம் (1959, ப.20), தன் பரிவு காட்டும் வேலையை, வெறும் அபிப்பிராயங்கள் கூறும் வேலையை காரண காரிய இயைபின்றித் தாக்கியும் தூக்கியும் செய்த வேலையைத்தான் வெகுகாலம் வரை திறனாய்வு எனக் கூறி வந்தார். இவர் உருவாக்கிய பரம்பரை இன்றும் தாக்கத்தைக் கொண்டிருக்கிறது.

1948 இலேயே 'இலக்கிய விமர்சனம்' என்ற ஒப்பற்ற சிறிய நூலை எழுதிய சிதம்பர ரகுநாதன் 'விழுது விடாமல்' போனதற்கான காரணங்களை ஆராயவேண்டும். தமிழ் இலக்கிய ஆராய்ச்சி உலகில்– வரலாற்றில், 'வெறும் அபிப்பிராயங்களைக்' கூறிய க.நா.சு.–விற்குப் பாரம்பரியம் கிடைத்தது. இரகுநாதனுக்கு அப்படி இல்லாமல் போனது ஏன்? 'இந்தியப் புரட்சி' பற்றி இந்தியப் புரட்சியாளர்க்கு ஏற்பட்டிருந்த புரிதல், வளர்ச்சி மற்றும் பிளவுகளுக்கும் 'இலக்கிய விமர்சன' வீழ்ச்சிக்கும் தொடர்புண்டா? என ஆராய வேண்டியது அவசியமாகும். சமூகம், வாழ்க்கை, இலக்கியம், திறனாய்வு என்ற வளர்ச்சி கட்சிக்கு அப்பாலும் சமூகம் சார்ந்து இயங்க முடியும் எனப் புரிந்து கொள்ளப்பட்டதா என்பதே வினா!.

க.நா.சு. மற்றும் இரகுநாதன் ஆகிய இரு பிரிவினர்க்கிடையே மூன்றாவது பிரிவாக ஒரு கூட்டம், நடுத்தர வர்க்கத்தின் எம்.ஏ., பிஎச்.டி., என்ற கூட்டம், திபு திபு வென்று முளைத்தது. இது நீண்ட காலம் தமிழ் ஆராய்ச்சி உலகைப் பட்டங்களுக்கான பட்டறையாக மாற்றி அமைத்தது. இந்தக் கூட்டத்தாரின் வேலை, இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு சில ஐரோப்பிய–அமெரிக்க நூல்களில் இருந்து மேற்கோள்களை எடுத்து

அவற்றிற்கான தமிழ் இலக்கியப் பகுதிகளைப் பொறுக்கியெடுத்துப் பொருத்திக் காட்டுவதாக அமைந்தது. இந்தவகைத் திறனாய்வுப் 'பற்றவைப்பு' வேலைகளுக்குப் பேராசிரியர் மு. வரதராசனின் மாணவர்கள் வேராகவும், உரமாகவும், களமாகவும் அமைந்தனர். ஏறக்குறைய முப்பதாண்டுகளுக்கு மேல் பல்கலைக்கழகக், கல்லூரித் தமிழ்த் துறைகளில் இவர்களே தலைமை தாங்கி ஆய்வு மாணவர்களையும் ஆற்றுப்படுத்தினர்.

இந்தக் கட்டத்தில், கல்கி, மு.வ., அகிலன், நா.பார்த்தசாரதி, ஜெயகாந்தன் முதலானோர் படைப்புகளுக்கு டாக்டர் பட்ட மாணவர்கள் திறனாய்வு என்ற பெயரில் விளம்பரவரிகளை எழுதிக் குவித்தனர். காவிய, புராண, சிற்றிலக்கிய, இக்கால இலக்கிய ஆய்வுகள் அனைத்தும் செய்தித் தொகுப்புகளாகவும் போற்றிப் பரவல்களாகவும், துதியாகவும் அமைந்தன. எனவே 'திறனாய்வில் பாராட்டுதல்' என்பதற்கு மாறாகப் 'பாராட்டு முறைத் திறனாய்வு' என்றவொரு வகையே உண்டாகிவிட்டது. இக்கட்டுரை இதைத் தொடர்ந்து விரிவாக ஆராய்கின்றது.

## II

ஓர் இலக்கியத்தைப் பாராட்டுதல் அல்லது திறனாய்தல் என்பது திறனாய்வோன் தன் புலமைப் பெருமையைக் காட்டுவதன்று ; இலக்கியப் படைப்பின் புலமை நலமும், படைப்பு நுட்பமும், அழகியல் கூறுகளும் அப்படைப்பின் முழுமைக்கு எவ்வாறு உதவியுள்ளன என்பதை வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். ஓர் இலக்கியத்தின் வெற்றி என்பது சமூகம், வாழ்க்கை, இலக்கியம், படிப்போர் என்பதன் கூட்டிணைவாக விளங்குவதைத் திறனாய்வோன் வெளிப்பத்திக் காட்டவேண்டும்.

இந்த வகையில் தமிழிலக்கியத் திறனாய்வு வரலாற்றின் தொடக்கக் காலத்தைப் பார்க்கும்போது கம்பராமாயணம், பெரியபுராணம் போன்ற பல இலக்கியங்களுக்குத் திறனாய்வு என்ற பெயரில் வெளிவந்தவையெல்லாம் சொற்களைப் பிடித்துக்கொண்டு ஊசலாடுவதும், கம்பரையும் சேக்கிழாரையும் வீழ்த்தித் திறனாய்வாளன் தன் 'மேதா விலாசத்தைக்' காட்டுவதாகவுமே அமைந்துள்ளன.

> "எண்ணிலா வருந்தவத்தோன்" என்று கம்பன் விசுவாமித்திரரை குறித்ததை வைத்துக் கொண்டு 'எண்ணில் ஆ வரும் தவத்தோன்' (நினைத்தால் காமதேனுவைக் கொண்டுவரும் தபசி), 'எண் இல் ஆ

வருந்தவத்தோன்' (எண்ணில்லாத காமதேனுக்களை வரும்படிச் செய்யும் வலிமை பெற்றவன்) என்றெல்லாம் வலிந்து பொருள்கொண்டு கழைக் கூத்தாடும் புலவர்கள் இந்தக் காலத்திலும் இருக்கிறார்கள். இந்தமுறை வியாக்கியானங்கள் விமர்சனமாகி விடுமா? முடியாது!."

என்னும் கருத்து (ரகுநாதன் 1948, ப.11) இங்கே பொருத்தமாக அமையக்கூடியது.

வியாக்கியானங்களே இன்னும் விமர்சனமாக வந்து கொண்டிருப்பதன் காரணங்களை ஆழ்ந்து நோக்கும் போது ஓர் அடிப்படைத் தவறு புலப்படுகின்றது. தமிழ் உரைநடை மரபில் உண்டாகியிருக்கும் விளக்கவுரை முறைகள், உரைநடை அல்லது கட்டுரை என்றாலே பழைய செய்யுளுக்குப் பழைய பொருளையே புதிய வாக்கியங்களில் எழுதிச் செல்லுதல் என்ற தவற்றை வலிமையாக்கியுள்ளன. பெரும்பாலான தமிழ்ப் பேராசிரியர்களின் பொங்கல் மலர்க் கட்டுரைகள் உரைநடைத் தொகுப்புகளாக வெளியிடப்பட்டுப் பாடப்புத்தகங்களாகவும் இருந்துவிட்டபடியால் 'சொல்லடுக்குத் திறனாய்வு' உலகில் மயிலை சீனி. வேங்கடசாமி மா. இராசமாணிக்கனார், அ. சிதம்பரநாத செட்டியார், இலக்குவனார் போன்றோர் 'ஆராய்ச்சி அறிஞர்கள்' என ஒதுக்கப்பட்டனர் போலும்

ஒரு நூலைப் பாராட்ட வேண்டும் என்ற 'ஆசை'யில் அந்நூலின் தன்மையையே மாற்றிக் காட்டும் திறனாய்வுகளும் உள. திருக்குறளின் கருத்துகள் காந்தியத்திலும் உள என்பதற்கும், 'காந்தியமே திருக்குறள்' என்பதற்கும் வேறுபாடுகள் உள. கருத்துகள் அல்லது தத்துவங்கள் குறிப்பிட்ட சமூக அமைப்பை விளக்குவன. இரும்பு கண்டுபிடிப்பதற்கு முன்னால் இரும்பு பற்றிய சிந்தனை உருவாகியிருக்க முடியாது. 19–20 ஆம் நூற்றாண்டின் முற்றிலும் மாறுபட்ட புதிய இந்திய சமூக அமைப்பின் விளைவாகத் தோன்றிய காந்தியத்தை இந்தக் காலத்திற்கு முற்றிலும் முரண்பட்ட கால விளைவான திருக்குறளில் பொருத்தி விளக்க முற்படுவது *'நல்ல திறமை'*யாகும் ; திறனாய்வாகாது!

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

– இதன் பொருள் தன் கையில் கிடைத்தவற்றைத் தன் உழைப்பால் தான் சேர்த்துள்ள பொருள்களைத் தானே துய்க்க

நினைக்காமல், தன் தேவைக்குப் போக எஞ்சியவற்றை எல்லோர்க்கும் வழங்க வேண்டும் என்பதே நூலோர் கூறிய அறங்களுள் தலையாய அறம் என்பதாகும். இதையே தர்மகர்த்தாப் பொதுவுடைமை என்று கூறினார் காந்தியடிகள்"

—என்று திருக்குறளுக்குப் புதுப்பொருள் கூறப்படுகின்றது (சிவஞானம் :1965,ப.9) இது குறளையோ காந்தியத்தையோ முறையாகப் பாராட்டுவதோ திறனாய்வதோ ஆகாது! இந்த இரண்டைப் பற்றிய சிவஞானத்தின் கருத்துகளின் வன்மை மென்மைகளுக்குள் புகத்தேவையில்லை. திருக்குறள் கூறுவதே காந்தியடிகள் கூறியதாகும் என்பது, இருவேறு முரண்பட்ட காலக் கோட்பாடுகளை ஒரே பையில் மூட்டை கட்ட முயல்வது கால, இட, கருத்து வழுக்களாகும்! காந்தியத்தைப் பரப்பவேண்டிய கட்டாயத்திற்குட்பட்ட ஆசிரியர் திருக்குறளைப் பாராட்டுவதிலும் காந்தியத்தைப் பரப்பியிருப்பது எவ்வகையிலும் திறனாய்விலோ, திறனாய்வில் பாராட்டுதல் என்பதிலோ அடங்காது! ஓர் இலக்கியத்தைத் தேவையின்றி அல்லது தன் தேவை காரணமாக தன் காலத்திற்குக் கருத்துகளுக்கு ஏற்ப முன்னுக்கு இழுத்தலும், பின்னுக்குத் தள்ளுவதும் அகவய ஆசைகளே ஆகும்!

*வருணாசிரமக் கொடுமையைச் சிவஞானம் எதிர்க்க முயல்வது* வரவேற்புக்குரியது. ஆனால் புறநானூற்றில் அதைப் புகுத்த முயல்வது புறநானூற்றைப் புறம்பழிப்பதாகும்.

"சங்க காலத்தில் நிலவிய சோசலிசபாணி சமுதாயத்தில் வகுப்புவாதப் பேய் எழவில்லை.

'வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும் கீழ்ப்பாலொருவன் கற்பின், மேற்பாலொருவன் அவன்கண் படுமே' என்று கூறுகிறது புறநானூறு. இது வருணாசிரமக் கொடுமைகள் இல்லை என்பதற்கு எடுத்துக்காட்டு".

—என்பது அவர் (ப.72) கூற்று!

நூற்றாண்டுகள் பல கொண்டுவந்து குவித்த சமூக மாற்றங்கள், வளர்ச்சிகள், அறிவியல் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றின் இயைபில் — தொடர்ச்சியாக உருவாக்கப்பட்ட ஒரு சமூக அறிவியல் கொள்கையே சோசலிசம் என்பதாகும்! மகாவீரர், புத்தர் காலத்திலிருந்தே 'லோகாயதக்' கருத்துகள் தொடர்கின்றன. ஆனால் இன்று நாம் கூறும் சோசலிசம் என்பது மாறி அமைந்துள்ள உற்பத்தி முறைகள், வழங்குமுறைகள், இவற்றினால் ஏற்பட்டுள்ள மக்கள் உறவுகள், கருவிகளின் ஆதிக்கம்

ஆகியவற்றை உட்கொண்ட அறிவியல் கொள்கையாகும். எனவே இக்கொள்கை சங்ககாலத்தில் நிலவியதாக – 'சோசலிச பாணி எனக் கூறப்பட்டிருந்தாலும்– கருதுவதே முரணும் பிழையுமாகும். சோசலிச சமுதாயத்தில்தான் வகுப்புவாதப் பேய் – வர்ணக் கொடுமை இருக்காது. என்பது சரி! ஆனால், 'வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ள' ஒரு சமுதாயத்தின் (கற்கவே முடியாத கீழ்ப்பாலொருவன்) 'கற்பின்' எனப்படும் சமுதாயத்தின் இலக்கிய வெளிப்பாட்டில் சோசலிசத்தைப் பொருத்திக் காட்ட முயல்வது இலக்கியப் பாராட்டும் ஆகாது ; திறனாய்வுமன்று! சங்ககாலச் சமுதாயம் சோசலிசபாணியா இல்லையா, சோசலிசம் சரியா தவறா என்பன வினாக்களோ விவாதமோ அல்ல. ஒரு கொள்கைக்குக் கட்டுப்பட விரும்பும் ஒருவர் அக்கொள்கை தோன்றிய காலத்திற்கு முற்றிலும் முரண்பாடான ஒரு கால நூலில் தன் விருப்பக் கொள்கையை நுழைப்பது தவறு. திறனாய்வன்று!.

ஏதேனும் ஒரு கட்டாயத்திற்குப் பாராட்டுதலைப் போலவே, நூலுக்கு வலிமை சேர்ப்பது, அறிவியல் தன்மை ஏற்றுவது என்ற பெயரால் வலிந்து வலிந்து புகழ்வது திறனாய்வன்று! வழிபாடுகள் பாராட்டுகள் அல்ல! இலக்கியத்தின் சிறப்புத் தன்மையை விளக்குவது என்ற பெயரில் காலப்பிழை ஏற்படுத்தப்படக் கூடாது.

"மேலை வானவ ரும்அறி யாததோர்
கோல மேஎனை ஆட்கொண்ட கூத்தனே
ஞாலமே விசும்பே இவை வந்துபோம்
காலமே உனை என்று கொல் காண்பதே"

என்ற பாடலுக்கு விளக்கம் கூறவந்தவர் (ஞானசம்பந்தம் : 1965, பக்.111–112),

"ஞாலமாகவும் விசும்பாகவும் இவை இரண்டும் தோன்றி மறைதற்குக் காரணமாகவும், நிலைக்களமாகவும் உள்ள காலமே! உன்னை என்று காண முடியும்? என்று பெருமான் கூறும்போது கொஞ்சம் வியப்படையத் தான் வேண்டியிருக்கிறது. இறைவனைக் காலம் கடந்தவன், காலகாலன் என்றெல்லாம் கூறுவது மரபு. ஆனால் ஞாலமும், விசும்பும் வந்து போவதற்குரிய 'காலம்' என்று கூறுவது புதுமை என்பது மட்டுமன்று" ஐன்ஸ்டினுக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அவர் கண்ட கனவைக் கண்டதுபோல்

அல்லவா இருக்கிறது" என்று தன் வியப்பை வெளிப்படுத்தியுள்ளார். வியப்புப் பாராட்டை விட வழிபாட்டிற்கே வழிகோலும்!

(மூர்த்தி : 1993, பக்.19–24)

காவிய உணர்ச்சியின் அடிப்படை, வியப்பு! அது படைப்பிலக்கியத்திற்குப் பயன்படலாம். ஆனால் திறனாய்வோ உண்மை விளைவை நோக்கிய இலக்கியப் போராட்டம்! உண்மை என்பது மக்களுக்கும் வாழ்வுக்கும் இலக்கியப் படைப்பைத் தொடர்புபடுத்துதலாகும். திறனாய்வு என்பது ஓர் அறிவுத்துறை என்பதை உணராமல் பலர் கம்பர், மாணிக்கவாசகர், திருத்தக்கதேவர் முதலானோரை விஞ்ஞானிகளாக்கிக் காட்டுவது விழைவுகளே அன்றி, திறனாய்வு விளைவுகள் அல்ல! நிழலை வைத்து நேரத்தைக் கூறும் சிற்றூர் மனிதனைப் போல, படைப்பூக்கமுள்ள படைப்பாளிகள் நோக்கறிவு சான்றவராக இருக்கலாம் ; ஆனால், ஐன்ஸ்டீன்கள் அல்ல!

ஒரு நல்ல மாணவன் தன் ஆசிரியரைப் பாராட்டுதற்கும், பரிந்துரை வேண்டி வருபவன் ஆசிரியனை அண்டிப் பலபடப் புகழ்வதற்கும் நிறைய வேறுபாடுகள் உள! 'பலபடப் பரக்கப் புகழ்தலே' இலக்கியத் திறனாய்வு வரலாற்றின் எல்லைக் கற்களாக உள்ளன.

"வானத்தில் உள்ள விண்மீன் கூட்டத்தை நிலைவிண்மீன் எனவும், நிலைதிரி விண்மீன் எனவும் வானவியலார் வகுத்துக் கூறுவர். தான் இருக்கும் இடத்தாலும் தூரத்தாலும் கட்புலனுக்கு இயங்காக் காட்சிதரும் மீனே நிலை விண்மீன்! அகிலன் தமிழ்ப் புது இலக்கிய வானில் நிலை விண்மீன் போன்றவர்!

> அகிலனின் மனம் கலையின் தலையூற்று! கருத்துகளின் ஒளிப்பேழை! அவரது எழுத்துகள் தமிழுக்குக் கிடைத்த புதுச்செல்வம்! அச்செல்வத்தின் பயனைத் துய்த்துப் போற்றுவது தமிழர் கடன்.
>
> வாழ்க! அகிலன், வளர்க! அவர்தம் தொண்டு!

–என்பது இன்னொரு பேராசிரியரின் (இராமலிங்கம்:1974,ப.192) திறனாய்வு முடிவுகளாகும். திறனாய்வு முடிந்த பின் இப்படி வாழ்த்துக் கூறுவதில் என்ன தவறு என வினவலாம்!. இந்த வாழ்த்து முடிவைக் கொண்டே இந்தத் திறனாய்வின் தன்மைகளைக் கணிக்க முடிகிறதல்லவா? 'இலக்கணம் கலையாகாது, பஞ்சாங்கம்

விஞ்ஞானமாகாது ; ரெயில்வே அட்டவணை பிரயாண நூலாகாது' என்பதைப் போலவே 'வெற்று கோஷங்கள்' திறனாய்வாகாது!.

படைப்பைப் புரிந்துகொள்ளுதலில் ஏற்படும் பிழைகள் முரண்பாடுகள் திறனாய்வுக்கு அடிப்படைத் தடைகளாகும். ஒரு படைப்பாளனைப் பாராட்டுவதாக எண்ணிக்கொண்டு, பாத்திரத்தின் படைப்பு முரண்பாடுகளை, அல்லது படைப்பாளனின் வரிகளிலேயே தெளிவாகக் காணக்கூடிய கருத்து முரண்பாடுகளைப் புரிந்துகொள்ளாமல், புரிந்துகொண்டாலும் அதைச் 'சரிகட்டுவதாக' எண்ணிக் கொண்டு குறிப்பிட்ட நாவலாசிரியர்களின் பாத்திரங்களைத் தூக்கி வைத்துக் கொண்டாடுகின்றனர். படைப்பை முழுக்கப் படிக்காமல் முன்னுரையையோ முடிவுரையையோ படித்துவிட்டு ஆய்வுக்கட்டுரை எழுதினால் அது 'நயவுரை'யாகவே அமையும்.

'எங்கே போகிறோம்' என்ற நாவலில் 'புவனா' என்றவொரு பெண் பாத்திரத்தைப் படைத்துள்ளார் அகிலன். இந்த நாவலை அறிமுகப்படுத்தும்போது 'இது ஒரு காந்திய ரியலிசம் உடைய நாவல்' என்கிறார் ஆசிரியர். காதலனால் வஞ்சிக்கப்படும் புவனா எல்லாவகை ஒழுக்கக்கேடுகளையும் மனமறிந்து ஏற்கிறாள்!. வாழ்வின் இறுதிவரை முறையற்றுப் பிழைத்தும், வாழ்ந்தும் பெருஞ்செல்வம் சேர்க்கிறாள் ; இறக்கும் இறுதிக் கட்டத்தில் ஈட்டிய பெருஞ்செல்வத்தை நற்செயலுக்கு அளித்துத் தியாகியாகின்றாள்!. 'புவனா'வின் பாத்திரப் படைப்புப் பற்றியதல்ல வினா!

காந்தியத்தின் அடிப்படைக் கூறுகளுள் 'முடிவைப் போலவே வழியும் நல்லதாக அமையவேண்டும்' என்பதும் ஒன்றாகும். இதை அறிந்து உணர்ந்திருப்பாரேயானால் இந்த நாவலின் திறனாய்வாளர் (வீராசாமி:1977, பக்.109–116) புவனா பாத்திரம் குறித்த தன் திறனாய்வை முறைப்படுத்தியிருக்க முடியும்.

காந்திய ரியலிசம், புவனா பாத்திரப் படைப்பு ஆகியவற்றை விமர்சிக்க இங்கே இடமில்லை. ஒரே நாவலில் படைப்பாளனால் மேற்கொண்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ள இலக்கிய கோட்பாட்டிற்கும் அதைச் சரியாகப் பிரதிபலிக்காத பாத்திரப் படைப்புக்கும் இடையே உள்ள பள்ளத்தைத் திறனாய்வாளர் இட்டு நிரப்ப முயல்வது, திறனாய்வுமன்று, திறனாய்வில் பாராட்டுதலும் அன்று! அகிலனின் நாவல் காந்திய ரியலிச

நாவல் என்றால் 'புவனா படைப்பு' தவறானது! புவனா சிறந்த படைப்பென்றால் இந்த நாவல் காந்திய ரியலிச நாவல் அன்று! இதைப் புரியாமல் போன திறனாய்வாளர் இரண்டையும் பலபடப் புகழ்வது திறனாய்வாகாது.

தமிழ் இலக்கியத் திறனாய்வு வளர்ச்சி—வரலாற்றில் இந்தக் குறைபாடு எதனால் ஏற்பட்டது? இன்றுவரை எப்படித் தொடர முடிகிறது.

பதவுரை, கருத்துரை பொழிப்புரை, விளக்கவுரை, *அருஞ்சொற்பொருள் விளக்கம் முதலான மரபுகளில்*—தொழில்நுட்பச் சொற்களைக் கையாண்ட உரையாசிரியர்களின் கல்வி நேர்மையில் குறைகாண வழியில்லை. 'முனைவன் கண்டதே முதல்நூல்' என்றும் மூலநூல் ஆசிரியன் குறையிலா முழு அறிவினன் என்றும் ஒளிவுமறைவு இன்றி அவர்கள் கூறினார்கள். ஆனால் திறனாய்வின் தோற்றமும் நோக்கமும் அதன் சமூக பயன்பாடும் முற்றிலும் வேறுபட்டதாகும். சமூக அறிவும், படைப்பிலக்கியத்தை ஆழக் கற்ற அறிவும், கல்வி நேர்மையும் உடையவராக இல்லாமல், டாக்டர் பட்ட பட்டறையில் காய்ச்சாமல் அடித்துத் துப்பிய (பட்டந்தாங்கிகளாகத் திறனாய்வாளர் பலரும் வெளிப்பட்டனர். எனவேதான் போற்றிப் பரவல்.....) உரைகளாகப் பல திறனாய்வுகள் வெளிவந்துள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாகப் படைப்பாளன், புத்தக வியாபாரி, திறனாய்வாளன் என்ற கூட்டுக்குழும வணிகத்தில் திறனாய்வு என்பது முதுகலை மற்றும் ஆய்வு மாணவர்களுக்கான நல்ல சந்தைப் பொருளாயிற்று. இலக்கிய மேடைப்பேச்சின் சாயலைத் திறனாய்வும் பெற்றது.

நூலறிமுகம், புத்தக விமர்சனம் (review article) கருத்துரை, மதிப்புரைக் கட்டுரை திறனாய்வு என்ற படித்தரம் வாய்ந்த, பல நிலைகளைக் கொண்டிருக்கும் ஒரு படைப்பு வெளிப்பாட்டிற்கான ஆய்வு வினைப்பாடு தமிழில் சரியாக உருவாகாமல் இன்றும் இருப்பதற்கு நாம் அனைவருமே கூட்டுப்பொறுப்பு ஏற்கவேண்டும்.

## III

வழிபாடுகளும், நயவுரைகளும், போற்றிப் பரவலும் எவ்வாறு திறனாய்வு என்ற பெயராலும் திறனாய்வில் பாராட்டுதல் என்ற பெயராலும் இன்றுவரை தொடர்கின்றனவோ அவ்வாறே 'வெற்றுத்தாக்குதல்' (='மட்டையடி' என்பது பேச்சு வழக்குச் சொல்) என்பதும் தமிழ் இலக்கியத் திறனாய்வு உலகில் இன்றுவரை 'கோ(ல்)லோச்சும்' ஒரு மரபு ஆகும்.

இந்தத் தாக்குதல் மரபு இரண்டு வகைப்படும் : 1. திறனாய்வாளன், தன்னைத் தவிர வேறு அறிவாளி எவனும் இருக்க முடியாது கூடாது என்ற அகம்பாவத்தில் எழுதுவது. முதல்நூல் எழுதியவன் 'முனைவன்' என்பதை ஏற்றுக் கொண்ட உரைமரபுக்கு நேர் எதிராகத் 'தான் மட்டுமே முனைவன்' என்ற பெயர் சூடிகள் ஆடும் 'தாக்குதல் தாண்டவம்' ஒருபக்கம் ஆகும். ஆங்கில மேற்கோள்கள், தனக்குக் கிடைத்த புத்தகம் மட்டுமே அறிவுச் சுரங்கம், மறைமுகமாகத் 'தமிழ்' மொழியைத் தாக்குவதில் ஒரு தனித்த சுகம் என்பதிலிருந்து வெளிப்படும் 'தாக்குதல்' மறுபக்கம் ஆகும். 2) இரண்டாவது நிலையில், குறிப்பிட்ட ஒரு கொள்கையை (–கட்சியை அல்ல) தத்துவ மரபை வெளிப்படையாக ஏற்றுக் கொண்ட, அறிவிக்கின்ற திறனாய்வாளரின் 'தாக்குதல்' அடங்கும். இந்த இரண்டாவது நிலையைச் செறிவாக ஆராய்வதற்கு முன்னால், பொதுவாகத் திறனாய்வு என்பதும், திறனாய்வில் பாராட்டு என்பதும் எப்படி அமைய வேண்டும் எனக் காண்பது நல்லது.

பொதுவாகச் சொல்லப்போனால் திறனாய்வு பொருத்தமாக அமைய வேண்டும். பொருத்தம் என்பது ஆய்வாளனின் மனப்பொருத்தம் அல்லது பிடித்தம் எனப் பொருள்படாது. படைப்பாளனின்/படைப்பின் நோக்கம், அந்த நோக்கம் படைப்பில் வெளிப்படும் தன்மை, படைப்பு சார்ந்து நிற்கும் காலம், இந்த மூன்றினால் ஏற்பட்டுள்ள/ஏற்படும் இலக்கிய அல்லது ச்முதாய விளைவு என்பதனுடைய பொருத்தமாகத் திறனாய்வு அமைய வேண்டும். இப்பொருத்தம், திறனாய்வாளனின் திறமையைப் படிப்போன் 'பாராட்டுதலில்' இல்லை. படைப்பின் உணர்வு படிப்போனின் நெஞ்சில் பதிய திறனாய்வு எப்படிப்பட்ட பாலமாக அமைகிறது என்பதில் இருக்கிறது. இந்தப் 'பொருத்தம்' என்ற சொல்லை விழிப்புடன் கருத்தில் கொள்ளவேண்டும். யாரும் எதையும் பொருத்தம் / பொருத்தமில்லை எனக் கொள்ளலாம் / தள்ளலாம். திறனாய்வாளனின் ஆராய்ச்சி நேர்மை வெளிப்படும் விதத்தைப் படிப்பாளன் எளிதாக உணர்கிறான்.

நேர்மை, உண்மை, அறம் முதலான அனைத்துச் சொற்களும் சார்புச் சொற்களே! (relative terms) சமுதாயப் பெரும்பரப்பைத் தழுவி நிற்கும் அறிவியலைப் போலவே பண்பாடும் திகழ்கிறது. இந்தப் பண்பாட்டின் பிரிக்கவியலா பிரிவுகளாகவே மொழி, கலை, இலக்கியம் ஆகியன உருவாகி வளர்கின்றன. சமூகம், வாழ்க்கை, இலக்கியம் என்ற முப்பரிமாணம் கொண்ட முழுமையாகத் திறனாய்வு அமைகிறது. அது

சில சமயங்களில் சமூகபண்பாட்டு வளர்ச்சிக்கான விதிகளையே உருவாக்கித் தருகிறது. பொருளியல், அரசியல் போலவே திறனாய்வியலும் சமூக வளர்ச்சி மரபின் விமர்சனமாகவும் சிக்கலுக்கான தீர்வு முனைப்புகளாகவும் அமைகிறது. சிக்கலுக்கான தீர்வுகள் 1. இறந்த காலத்தில் தேடப்படுகிறது, அல்லது 2) எதிர்காலத்தில் தேடப்படுகிறது. திறனாய்வாளன் எப்படித் தேடுகிறான் என்பதே 'நேர்மை'யை 'உண்மை'யைப் பொருத்தத்தை அடையாளம் காட்டுவதாகும்.

'படைப்பாளன் இப்படி எழுதியிருக்க முடியாது' என்ற ஐயத்தை அல்லது வியப்பைப் படிப்பவரிடம் ஏற்படுத்தாமல் 'இப்படி எழுதியுள்ளதைப் புரிந்து கொள்வதற்கான வழிமுறை இதுவே' என்று படிப்பவரை உணரச் செய்யும்படியாக, ஒப்புக்கொள்ளச் செய்யும்படியாக திறனாய்வு அமைய வேண்டும். திறனாய்வின் பயனே படைப்புக்கும் படிப்போனுக்கும் இடையே உள்ள திரைகளை விலக்குவதாகும். படைப்பின் இயல்பூக்க 'creative impulses' நெறிபோல திறனாய்வு, படைப்பின் கற்கை நெறியாக அமையவேண்டும். இலக்கியத்தை அதன் வேர்கள் சார்ந்தும், சமூகம் சார்ந்தும், பண்பாட்டின் இயங்குநெறி சார்ந்தும் புரிந்துகொள்ள இடப்படும் வழித்தடமே திறனாய்வாகும்.

திறனாய்வு தவிர்க்கவியலா வகையில் 'ஒப்புநோக்கை' ஒரு பகுதியாகக் கொண்டிருக்கிறது. ஒப்பீடு, இன்னொரு படைப்பைத் தாழ்த்தவோ, தவிடுபொடியாக்கவோ அன்று ஒத்த படைப்புகளின் நடுவில், குறிப்பிட்ட படைப்பின் தனித்தன்மையைக் காண ஒப்பீடு பயன்படுகிறது. குறுந்தொகை, இடைக்கால அகப்பாடல்கள், கண்ணதாசன் காதல்பாடல்கள், மற்றும் பாரதிதாசனின் காதல் வரிகள் ஆகியவற்றின் இடையே கவிஞர் மீராவின் கனவுகள்+கற்பனைகள்=காகிதங்கள் (1972) படைப்பின் தனிச்சிறப்பை ஒப்பீட்டின் வழியே அடையாளம் காட்ட முடியும். ஒப்பியல் திறனாய்வு மரபு, மரபின் தொடர்ச்சி, புதிய சமூகத்தின் கரு, புதுக்கருவின் உருவமாற்றங்கள் ஆகியனவற்றை வெளிச்சப் படுத்துவதாகும்.

திறனாய்வு, படைப்பில் இருந்து படிப்போனை நீக்கிவிடக் கூடாது; படைப்பின் இயங்கு பொருளை உள்ளவாறே புரிந்து படைப்பில் ஐக்கியப்படவோ, உணர்வுத் தெளிவுடன் விலகி நிற்கவோ உறுதுணை செய்ய வேண்டும்.

தத்துவ மரபைக் கொள்கையைச் சார்ந்து வெளிப்படையாக நிற்கும் *'திறனாய்வுத் தாக்குதல்' என்றால் என்ன?*

இந்த வினா எளியதா, கடினமானதா என்பது இறுதியில் தானாகவே விளங்கும். இலக்கிய ஆய்வு என்பதை ஒரு சமூக அறிவியல் துறையாக விளங்கிக்கொள்ளும் போது இந்த வினா வியப்பை அளிப்பதில்லை. ஒரு தத்துவ மரபை – ஆராய்ச்சி நெறியைச் சார்ந்து வெளிப்படையாக நிற்கும் ஒருவன் எதிர்த் தத்துவ மரபு இலக்கியத்தைப் பாராட்டவே முடியாது. அப்படி கூடுமேயானால் அதுவே ஒரு 'இலக்கிய வணிகச் சமரசமாகும்'.

எந்தவொரு படைப்பும் ஏதேனும் ஒரு சமூகச் சார்போடே வெளிவருகிறது. எனவே குறிப்பிட்ட அந்தச சமூகச் சார்பை ஒப்புக்கொள்ள முடியாத, மேலும் எதிர்க்க வேண்டியுள்ள திறனாய்வாளன், அதைச் சார்ந்து–அந்தச் சார்பைத் தாங்கி வரும் படைப்பைப் பாராட்ட முடியாததோடு எதிர்த்துத் தாக்க வேண்டியவனாகவும் உள்ளான். திறனாய்வில் தாக்குதல் என்பது இவ்வாறு புரிந்துகொள்ளப்படுகிறது.

இலக்கியத்தின் *சமூகத் தன்மையை அம்பலப்படுத்துதல்* என்பதும் திறனாய்வாளனின் வேலையே ஆகும். ஒரு படைப்பு, படிப்பவர் உலகில் புழங்கத் தொடங்கியதும், அந்தப் படைப்பு, படைப்பாளி, படிப்பாளி என்ற இரண்டன் சமூகக் கூட்டுத் தொகையாகும். எனவே பொருளியல் வல்லுநர் போன்ற இலக்கியத்திறனாய்வாளன், இரண்டு வேலைகளை ஒரே சமயத்தில் செய்கிறான் : 1. எதிர்கால மாறுதலுக்கு உரிய புரட்சிகரமான இலக்கியத் தன்மைகளைப் பாராட்டுகிறான் ; 2. சமுதாயத்தின் எதிர்கால மாறுதலைப் பின்னுக்கு இழுக்கும் தன்மைகளை எதிர்த்துத் தாக்குகின்றான். திறனாய்வு, 'தத்துவத் தாக்குதலை'–த் தன்னுள் கொண்டிருக்கிறது என்பது இதுதான்! (மூர்த்தி :1994)

எந்தவொரு நூலும் ஓர் ஐயத்தையோ முரண்பாட்டையோ ஒத்துப் போதலையே கொண்டிருக்கிறது. திறனாய்வின் 'எதிர்த்துத் தாக்குதல்' என்ற கூறு ஐயம், முரண்பாடு, ஒத்துப்போதல் என்ற மூன்று சமூகக்காரணிகளோடு சேர்த்து வைத்துப் பார்க்கும்போது நன்கு புரிந்துகொள்ளப்படக் கூடியதாகும். இலக்கியம் மட்டுமல்ல– அதாவது இலக்கியத்தைப் போலவே–திறனாய்வும் பொதுமக்கள் வாழ்விலும் போராட்டத்திலும் நேரடியாகவோ, *மறைமுகமாகவோ பங்கு வகிக்க* வேண்டும். பொதுமக்கள் வாழ்விற்கும் போராட்டத்திற்கும் துரோகம்

இழைக்கும் படைப்புகளைப் பாராட்டக் கூடாததோடு எதிர்த்துத் தாக்கவும் வேண்டும். சமுதாயப் பொறுப்புடைய திறனாய்வாளன் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தையும் சுரதாவையும் ஒரே கோட்டில் வைத்துத் திறனாய்வை அணுக முடியாது. இங்குதான் திறனாய்வில் பாராட்டுதலும் தாக்குதலும் வெளிப்படுகிறது. எனவே, இறுதியாக திறனாய்வு என்பது–

1) வெற்றுச் சொல்லடுக்காக இருக்கக் கூடாது ; 2) ஒரு கட்டாயத்திற்கு எழுதியதாக இருக்கக் கூடாது ; 3) வலிந்து எழுதியதாக இருக்கக் கூடாது ; 4) வெறும் முழக்கங்களாக இருக்கக் கூடாது ; 5) பொருத்தமானதாக இருக்க வேண்டும் ; 6) இப்படி இவர் எழுதியிருக்க முடியாது என்ற ஐயத்தைப் படிப்பவரிடம் ஏற்படுத்தாமல் படைப்பைப் புரிந்துகொள்ளும் நெறியை *உணரச் செய்ய வேண்டும்* ; 7) படைப்பின் தனிச்சிறப்பை வெளிப்படுத்தப்பிற படைப்புகளோடு ஒப்பிடுவதாகவும் அமையலாம். இவை மட்டுமேயன்றி, 8) இலக்கியத்தின் சமுதாயத் தன்மைகளுள் புரட்சிகரமான, எதிர்கால மாறுதலுக்கு உரிய தன்மைகளைப் பாராட்டுவதும், சமுதாயத்தைப் பின்னுக்கு இழுக்கக் கூடிய தன்மைகளை எதிர்த்துத் தாக்குவதும் ஆகும்.

*நன்றி*

இந்தக் கட்டுரையின் முதல் வரைவு ஏறக்குறைய 23 ஆண்டுகளுக்கு முன்பு நான் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய போது எழுதியதாகும். இதன் ஒரு சிறிய பகுதி 1989 இடைப்பகுதியில் 'தினப்புரட்சி' நாளேட்டில் வெளியிடப்பட்டது. வார்சா பல்கலைக் கழகத்திற்கு வருவதற்கு முன்னால், புத்தகங்களை ஒழுங்கு செய்தபோது, இதன் பழைய மூலப்படி கிட்டியது. இதன் மறு ஆக்கமே இந்தக் கட்டுரை. கட்டுரையின் முதல் வரைவு எழுதப்பட்ட நிலையில் அதைக் கவனமாகப் படித்துத் தோழமையோடு கருத்துகள் கூறிய பேராசிரியர்கள் ந. தெய்வசுந்தரம், ந. சஞ்சீவி (மறைவு), எஸ். என். கணேசன் (மறைவு), கா. சிவத்தம்பி, கி. அரங்கன் மற்றும் இராம.சுந்தரம் ஆகிய அனைவர்க்கும் நன்றி.

Address for Communication

**Dr. R. Murthy,**
Visiting Associate Professor of Tamil,
Dept of Indology, Institute of Oriental Studies,
Warsaw University, WARSAW, POLAND.

*நூலடைவு*


1) இராமலிங்கம், மா. 1974
*அகிலனின் கலையும் கருத்தும்*, சென்னை : தமிழ்ப் புத்தகாலயம்.

2) சிவஞானம், ம.பொ. 1965
*இலக்கியத்தில் சோசலிசம்,* சென்னை : இன்ப நிலையம்

3) சுப்பிரமணியம், க.நா. 1959
*விமர்சனக் கலை,* சென்னை : தமிழ்ப் புத்தகாலயம்

4) ஞானசம்பந்தம், அ.ச. 1965
*புதிய கோணம்,* சென்னை : பாரி நிலையம்

5) நாதன், ஆர்.எச். (மொ.பெ) 1970
*மாக்ஸிம் கார்க்கியின் கடிதங்கள்*
சென்னை : நியூ செஞ்சுரி புக் அவுஸ் (பி.) லிட்

6) மீரா, 1972
*கனவுகள்+கற்பனைகள் = காகிதங்கள்,* சிவகங்கை : அகரம்

7) மூர்த்தி, து. 1978அ
*இலக்கியத்தில் அழகியல் - ஒரு முன்னுரை*
*Annals of Oriental Research, Vol. 28, Part-I*
சென்னை : சென்னைப் பல்கலைக்கழகம்

1978—*இக்காலக் கவிதைகள் மரபும் புதுமையும்*
சென்னை : சென்னை தமிழியல் நிறுவனம்

1993—*அச்சத்தினின்று விடுதலை*
சென்னை : சமூக ஆராய்ச்சி நிறுவனம்

1994—*பாரதியின் தத்துவவியல் கோட்பாடுகள்*
சென்னை : புலமை வெளியீடு

8) ரகுநாதன், சிதம்பர, 1948
*இலக்கிய விமர்சனம்*—சென்னை : தமிழ்ப் புத்தகாலயம்

9) Lenin, 1982
Articles on Tolstoi, Moscow : Progress Publishers

10) வீராசாமி, தா.வே. 1977
*கல்கி அகிலன் படைப்புக்கலை*
சென்னை : தமிழ்ப் புத்தகாலயம்.

# இரகு வம்சமும் இராமாவதாரமும்

முனைவர் பெ. சுயம்பு
ஆதித்தனார் கல்லூரி, திருச்செந்தூர்

இந்தியக் கவிஞர்களுள் இறவாப் புகழுற்ற கவிதைகளைப் படைத்து, நீங்காப் பெருமை பெற்றவர்கள் சிலர். அவர்களுள் காளிதாசனும் கம்பனும் கவிப் பேரரசர்களின் பட்டியலில் முதன்மையானவர்கள்.

## *காளிதாசன் வரலாறு*

காளிதாசன் சமஸ்கிருதக் கவிஞர்களுள் தலையானவர். இவரது வரலாற்றிற்கான தெளிவான சான்றுகள் கிடைக்கவில்லை. அந்தணர் இனத்தவர் என்றும் ஆயர்இனத்தவர் என்றும் செவிவழிக் கதைகள் தெரிவிக்கின்றன. நாட்டு இளவரசிக்கும் அமைச்சர்களுக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக, அமைச்சர்கள் இளவரசியைப் பழி தீர்க்க வஞ்சகத் திட்டம் தீட்டினர். மந்தமதியுடைவராக இருந்த ஆயர்இனத்து இளைஞனைப் பெருங்கவிஞர் என்று பொய்யாகக் கூறி, இளவரசிக்கு மணம் செய்வித்தனர். அவ்விளைஞன் இளவரசியின் அறிவுரைப்படி காளிதேவியை வழிபட்டு, தேவியின் அருளால் பெருங்கவிஞர் ஆனார். காளிதேவியின் பக்தனான அவர் காளிதாசன் என்ற பெயரில் மகாகவி ஆனார். இவ்வாறு கதைகள் கூறப்படுகின்றன.

காளிதாசனின் நாடு குறித்த செய்தியும் தெளிவாகக் கிடைக்கவில்லை. இவர் காஷ்மீரில் பிறந்தார் என்றும் உஜ்ஜயினி நகரில் வாழ்ந்தார் என்றும் வெவ்வேறு செய்திகள் கூறப்படுகின்றன. இவர் விக்கிரமாதித்த மன்னனின் அவைப்புலவராக இருந்தார் என்று கூறுவோர், இவரது காலத்தைக் கி.மு. 56–ஆம் ஆண்டளவிற்கு உரியதாகக் கூறுகின்றனர். குப்தர்களின் அரசவையில் புலவராக விளங்கினார் என்போர் கி.பி. 4–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று கூறுகின்றனர். இவரது வாழ்க்கை வரலாறு எவ்வாறாயினும், இலக்கியச் சாதனை உலகளாவியது. உலகப் பெருங்காப்பிய வரிசையில் இடம்பெறத் தக்க கவின்மிகு கவிதைச் செல்வங்களைப் படைத்து, உலகமாந்தருக்கு வழங்கிய பெருமை மகாகவி காளிதாசனைச் சாரும்.

சமஸ்கிருத ஐம்பெருங்காப்பியங்களுள் இரகுவம்சம், குமாரசம்பவம் என்னும் இரண்டனை ஈந்த பெருமை காளிதாசனுக்கு உரியது. இவை தவிர, இருதுசங்காரம், மேகசந்தேகம், மாளவிகாக்னி மித்ரம், விக்ரமூர்வசீயம், அபிக்ஞான சாகுந்தலம், சியாமளா தண்டகம், சிருங்கார திலகம், இராட்சச காவியம் போன்ற சிற்றிலக்கியங்களையும் இவர் படைத்துள்ளார்.

## *கம்பன் வரலாறு*

கம்பன் வரலாறும் காளிதாசன் வரலாற்றைப் போலவே தெளிவான சான்றின்றிக் காணப்படுகிறது. கம்பன் திருமால் பக்தர் ஆனால் இவரது பெயரோ காஞ்சிபுரத்தில் கோயில் கொண்டருளுகிற ஏகம்பநாதனாகிய சிவனது பெயராக உள்ளது. எனவே இவரது முன்னோர் சிவ வழிபாட்டினர் அல்லது சமயச்சார்பற்றோர் என்பது தெளிவாகிறது.

கம்பன் காலம் குறித்து வெவ்வேறு கருத்துகள் நிலவுகின்றன. சிலர் இவர் கி.பி. 9–ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர் என்பர். வேறு சிலரோ கி.பி. 12–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பர். இவரது சமகாலத்தைய கவிஞர்கள் குறித்த செய்திகளும் ஒருமித்துக் காணப்படவில்லை. கம்பனும் ஔவையும் சமகாலத்தவர் என்று சிலர் கருதுகின்றனர். இத்தகையோர் இவ்விரு கவிஞர்களுக்கும் இடையே கவிதைப் போர் நடைபெற்ற செவிவழிக் கதையினையும் கூறுகின்றனர். கம்பனும் ஔவையும் சந்தித்து உரையாடினர். ஒருகாலடீ நாலிலைப் பந்தலிலே என்ற பாடலடிக்குப் பொருள் கூறுமாறு கம்பன் ஔவையிடம் கேட்டார். தம்மை அடீ என்று கூறி அவமதித்ததாகக் கருதிய ஔவை,

> "எட்டேகால் லட்சண மேஎமனே றும்பரியே
> மட்டில் பெரியம்மை வாகனமே முட்டமேற்
> கூரையில்லா வீடே குலராமன் தூதுவனே
> ஆரையடா சொன்னா யடா"

என்று கம்பனை இகழ்ந்து பாடினார். எட்டேகால் என்னும் எண் (81/4) தமிழில் அவ (அ=8, வ=1/4) என்று எழுதப்படும். எமன் ஏறும் பரி=எருமைக்கடா பெரியம்மை=மூதேவி பெரியம்மை வாகனம்=கழுதை ராமன் தூதுவன்=அனுமன், குரங்கு ஔவை கம்பனை அவலட்சணமே, எருமைக்கடாவே, கழுதையே, கூரையில்லா வீடே, குரங்கே என்றெல்லாம்

வசைமொழிகளால் பாடி இகழ்ந்தார் என்பர். இக்கதை தனிப்பாடல் திரட்டில் இடம்பெற்றுள்ள பாட்டினைக் கொண்டு புனையப்பட்டுள்ளது.

கம்பனும் ஒட்டக்கூத்தனும் சமகாலத்தவர் என்றும் உத்தரகாண்டம் என்ற இறுதிப்பகுதியை ஒட்டக்கூத்தன் பாடி, கம்பனது இராமாவதாரத்துடன் இணைத்தார் என்றும் ஒரு செய்தி வழங்கப்படுகிறது. ஆனால் அப்பகுதி குறித்தோ, ஒட்டக்கூத்தனுடன் தமக்குள்ள உறவு குறித்தோ கம்பன் தம் படைப்பில் எவ்விடத்தும் சுட்டிக்காட்டவில்லை.

கம்பனுக்கு அம்பிகாபதி என்றொரு மகன் இருந்தான். அவன் ஆதித்தசோழனது மகள் அமராவதியைக் காதலித்தான். அக்காதலை உடன்படாத சோழன் அம்பிகாபதியை வஞ்சனையாகக் கொலை செய்தான். அதனை ஆற்றாத அமராவதி மூர்ச்சித்து இறந்தாள். இது ஒரு செவிவழிக்கதை. இத்தகைய செவிவழிக்கதைகள் பல தமிழகத்தில் வழங்கப்படுகின்றன. இவையாவும் சில தனிப்பாடல்கள் அல்லது நாட்டுப்புறவியல் சார்ந்த கட்டுக்கதைகளின் அடிப்படையில் கூறப்படுவனவாகும்.

கம்பன் தேரழுந்தூரில் பிறந்து, குமரி மாவட்டப் பகுதி உள்ளிட்ட பல இடங்களில் வாழ்ந்து, நாட்டரசன் கோட்டையில் மறைந்தார் என்ற கருத்து நிலவுகிறது. நாட்டரசன் கோட்டையில் கம்பருக்குச் சமாதியும் நினைவகமும் காணப்படுகின்றன.

கம்பன் தம் இராமாவதாரத்தில் வெண்ணெய்நல்லூர் சடையன் என்னும் ஒருவரின் வள்ளல்தன்மை பற்றி 12 பாடல்களில் சிறு குறிப்புகளைத் தருகிறார். எனவே இவர் அந்த வள்ளலால் ஆதரிக்கப்பெற்றவர் என்ற கருத்து வலுவாக நிலவுகிறது. சடையன் என்பவரைச் சடையப்ப வள்ளல் என்று இலக்கிய உலகம் கூறுகிறது.

கம்பன் இராமாவதாரம் மட்டுமின்றி, வேறு சில சிற்றிலக்கியங்களும் பாடியுள்ளார். சரசுவதி அந்தாதி, இலக்குமி அந்தாதி, சடகோபரந்தாதி, ஏரெழுபது, திருக்கை வழக்கம், காஞ்சிப்புராணம், காஞ்சிப் பிள்ளைத்தமிழ், காஞ்சிக் குறவஞ்சி, செம்பொற் சிலை எழுபது, மும்மணிக்கோவை, சோழர் குறவஞ்சி, தொண்டை மண்டல சதகம் எனக் கம்பன் இயற்றிய இலக்கியங்களின் பட்டியலை மா.வரதராஜன், கம்பர் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டே என்னும் நூலில் சுட்டுகிறார்.

## காப்பிய அமைப்பு

இரகுவம்சம், இறைவணக்கத்துடன் தொடங்குகிறது. அதனை அடுத்து, அவையடக்க சுலோகங்கள் தொடர்கின்றன.

> "சூரியனிடமிருந்து தோன்றிய வம்சம் எங்கே எனது
> சிற்றறிவு எங்கே கடக்க இயலாத கடலை அறிவின்மை
> காரணமாகச் சிறிய படகினால் கடக்க விரும்புகிறேன்"
> (சருக்கம் 1, சுலோகம் 2)

> "உயரமான மனிதன் ஒருவனால் அடையத் தகுந்த உயரத்தில்
> உள்ள பழத்தினை அடைவதற்கு விரும்புகிற குள்ளன்
> ஒருவன் தன் கைகளை உயர்த்தித் துள்ளித் துள்ளி
> எழும்பிக் குதிப்பதைப் பார்ப்போர் கேலி செய்து நகைப்பர்"

"அவ்வாறே புலமை மிகுந்த அறிஞர்களால் அடையத் தகுந்த புகழை அடைவதற்கு இக்காப்பியத்தை நான் எழுத விரும்புகிறேன். அதனால் நான் அறிஞர்களின் கேலிக்கு ஆளாவேன்."

(சருக்கம் 1, சுலோகம் 3)

அவையடக்க சுலோகங்கள் இரண்டும் சிறந்த உவமைகளைக் கொண்டு காளிதாசனின் கவிதைத் திறனுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன.

இரகுவம்சம் பத்தொன்பது சருக்கங்களைக் கொண்டது. இதில் காண்டம், பருவம் போன்ற பெரும் பிரிவு இல்லை. ஒவ்வொரு சருக்கத்தின் இறுதியிலும் இது மகாகவி ஸ்ரீ காளிதாசன் இயற்றிய இரகுவம்சத்தின் முதலாம் சருக்கம் முற்றுப்பெற்றது என்பது போன்ற குறிப்பு இடம் பெற்றுள்ளது.

இரகுவம்சம் இரகு மன்னனின் வழித்தோன்றல்களின் வாழ்க்கைச் சுருக்கக் குறிப்புகளைத் தருகிறது. இரகுவின் தந்தை திலீபனின் பிறப்புடன் தொடங்குகிறது. இறந்துபோன அக்கினி வருணன் என்னும் மன்னனது விதவை மனைவியருள் ஒருத்தி வயிற்றில் சுதர்சனன் என்ற குழந்தையுடன் அரியணையில் அமர்ந்து நாட்டைக் காத்தாள் என்ற செய்தியுடன் நிறைவுறுகிறது. சுதர்சனன் இரகுவம்சத்தின் கடைசி மன்னனாகக் கருதப்படுகிறான்.

இரகுவம்சத்தில் தன்னேரில்லாத தலைவனாக யாரும் விவரிக்கப்படவில்லை. இக்காப்பியம் பல மன்னர்களைப் பற்றிய குறிப்புகளைத் தருகிறது. அவர்களுள் திலீபன், இரகு, அஜன், தசரதன், இராமன், குசன், அக்கினிவருணன் ஆகியோர் சிறப்பாக விவரிக்கப் பெற்றுள்ளனர்.

சூரியகுல மன்னர்களுள் இரகு சிறந்த பண்புகளும் நல்லொழுக்கமும் உடையவன். மக்களுக்காக நல்லரசு புரிந்தவன். அவன் பல மன்னர்களைப் பணியச் செய்தான். அவனது வெற்றிப்புகழ் காஷ்மீரம் முதல் குமரி வரையிலான பரதகண்டத்தில் மட்டுமின்றி காம்போஜம், பாரசீகம் போன்ற அயல்நாடுகளையும் பணியச் செய்து அங்கு பரவியது. இம்மன்னனின் பெருமை பற்றியே இவனது வழி வந்த குலத்திற்கு இவனது பெயர் சூட்டப்பெற்றுள்ளது. இரகு மன்னன் பற்றிய செய்திகள் மூன்றாம் நான்காம் சருக்கங்களில் விவரிக்கப்பட்டுள்ளது.

இரகுவம்சத்தின் ஈடு இணையில்லாத பெருமைக்கு உரியவரும் திருமாலின் அவதாரமானவருமாகிய இராமபிரானின் செய்திகள் பத்து முதல் பதினைந்து முடியவுள்ள ஆறு சருக்கங்களில் விரிவாக இடம்பெற்றுள்ளன. இராமபிரானது பிறப்பு முதல் அவர் நிலவுலகிலிருந்து பிரிதல் வரையிலான நிகழ்ச்சிகள் சுருக்கித் தரப்பெற்றுள்ளன.

கம்பன் தன் படைப்பிற்கு இராமாவதாரம் என்று பெயரிட்டிருந்தாலும் கம்பராமாயணம் என்ற பெயரே அதற்கு நிலைத்துள்ளது. கம்பராமாயணமும் இரகுவம்சத்தைப் போன்று இறைவணக்கத்துடன் தொடங்குகிறது. தொடர்ந்து அவையடக்கப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

"ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு
பூசை முற்றவும் நக்குபு புக்கென
ஆசை பற்றி அறையலுற்றேன் மற்றிக்
காசில் கொற்றத் திராமன் கதையரோ" (பாயிரம் 4)

"வையம் என்னை இகழவும் மாசெனக்
கெய்தவும் இதுவியம் புவதி யாதெனின்
பொய்யில் கேள்விப் புலமையி னோர்புகல்
தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே" (பாயிரம் 6)

இவை போன்ற கவிதைகள் கற்பனை, விவரிப்புத்திறன் முதலிய கவிதை இயல்புகளில் காளிதாசனுக்கும் கம்பனுக்கும் இடையே உள்ள நெருக்கத்தைப் புலப்படுத்துகின்றன. கவிதையுலகில் முன்னோர் கற்பனைகளையும் மொழிநடையினையும் பிந்தையோர் மாதிரியாக ஏற்றுக்கொள்வது இழுக்காகக் கருதப்படாது. இந்த ஏற்பு கவிஞர்களுக்கு இடையே உள்ள மனவொற்றுமையினையும் பலநூல் தேர்ச்சியினையுமே வெளிப்படுத்துவதாக அமையும். காளிதாசனுக்கும் கம்பனுக்கும் இடையேயான இத்தகைய இயல்பினை இயற்கை வருணனை, உணர்ச்சி வருணனை போன்ற இடங்களில் குறிப்பாகக் காணமுடிகிறது.

கம்பனது இராமாவதாரம் (கம்ப இராமாயணம்) ஆற்றுப்படலம் முதலாக விடை கொடுத்த படலம் ஈறாக 118 படலங்களைக் கொண்டது. இராமபிரான் இக்காப்பியத்தின் தன்னேரில்லாத தலைவன். அவரது பிறப்பில் தொடங்கி, இராவணனைக் கொன்று அவர் அயோத்தியில் முடிசூட்டிக்கொள்வதுடன் இக்காப்பியம் நிறைவுறுகிறது. கதை நிகழ்ச்சிகள் யாவும் அவரது அவதாரச் சிறப்பினைப் பற்றியனவாகத் தொடர்ச்சியாக அமைக்கப்பெற்றுள்ளன. தண்டியாசிரியர் கூறுகிற பெருங்காப்பிய இலக்கணத்திற்கு இலக்கியமாக இது திகழ்கிறது.

## *கற்பனைக் கவின்*

ஒரு கவிஞன் மனித உணர்ச்சிகளை விவரிக்குமிடத்துப் படிப்போரும் அவ்வுணர்ச்சிக்கான சுவையைத் துய்க்கும் நிலையை அடைவார்களேயாயின், அக்கவிஞன் தன் படைப்பாற்றலில் நிறைவை அடைந்துவிட்டான் என்று கொள்ளலாம். சிறந்த கவிஞர்களிடம் இந்த அரியஆற்றல் எளிதாக அமைந்துவிடுகிறது. காளிதாசனிடமும் கம்பனிடமும் இது இயல்பாகவே காணப்படுகிறது.

கவிஞர்கள் காதற்சுவையைப் பெரிதும் விரும்பிப் பாடுகின்றனர். இச்சுவை ஒவ்வொருவரிடமும் இயல்பாகவே ஒன்றியிருப்பது இயற்கையின் நியதியாகும். இந்த நியதியே காதலை யாவரும் விரும்பிச் சுவைப்பதற்குக் காரணமாகிறது. இச்சுவை மாந்தருக்கு இன்ப உணர்வைத் தருவதும் மற்றொரு காரணமாகும்.

காதற் சுவையைப் பாடுவதில் காளிதாசனும் கம்பனும் சிறந்து விளங்குகின்றனர். இருவரின் கற்பனையும் அதனை விவரிக்கும் திறனும் பேரளவில் ஒத்துக் காணப்படுகின்றன.

அஜன் போஜ மன்னனின் தங்கை இந்துமதியை மணந்த பின்னர், இருவரும் அரசவீதியில் உலாச் சென்றனர். அஜனைக் காண மகளிர் பேரவாக் கொண்டனர். அவர்கள் செய்து கொண்டிருந்த வேலைகளை அரைகுறையாக இடையில் விட்டுவிட்டுச் சன்னல்களின் அருகே வந்து நின்றனர்.

ஒருத்தி சன்னலை நோக்கி ஓடினாள். அவளது கூந்தல் அவிழ்ந்து மலர்கள் தரையில் உதிர்ந்தன. அவிழ்ந்த கூந்தலைக் கையினால் தாங்கியவாறு, மன்னனைக் கண்களால் பருகியபடி நின்றாள். கூந்தலை முடியவேண்டும் என்ற எண்ணம் அவளுக்குத் தோன்றவே இல்லை.

ஒரு பெண் கண்களுக்கு மை எழுதிக் கொண்டிருந்தாள். வலக்கண்ணில் எழுதியாயிற்று. இடக்கண்ணில் எழுதாமலேயே தூரிகையைக் கையில் ஏந்தியவாறு சன்னலை அடைந்துவிட்டாள்.

ஒருத்தியின் இடுப்பிலுள்ள ஆடை அவிழ்ந்திற்று. ஆடையை உடுக்காமலேயே அவள் சன்னல் அருகில் வந்து நின்றாள். இன்னொருத்தி மேகலைக்காக நூலில் மணிகளைக் கோத்துக்கொண்டிருந்தாள். அஜனைக் காணும் வேட்கையினால் சன்னலை நோக்கி ஓடினாள் மணிகள் சிதறின. அவளது கை நூலை மட்டுமே பிடித்துக்கொண்டிருந்தது.

பெண்களின் முகங்கள் தாமரைப் பூக்களையும் கண்கள் வண்டுகளையும் அவர்கள் அருந்திய மது பூக்களில் உள்ள தேனையும் ஒத்திருந்தன. அதனால் அவர்கள் சன்னல் அருகில் வந்து நின்ற காட்சி சன்னல்கள் தாமரைப்பூக்களால் அலங்கரிக்கப்பட்டவை போன்று காணப்பட்டது. (சருக்கம் 7, சுலோகம் 6–12)

இவை காளிதாசனின் வருணனைகளுள் சில. அஜனின் எழிலைக் கண்டு தம்மை மறந்து காதலுணர்வு பெற்றவர்களாக மகளிரைக் காளிதாசன் வருணிக்கிறார். ஆனால் கம்பனோ இராமபிரானின் பேரெழிலில் மனத்தைப் பறிகொடுத்த மகளிரை வருணிக்கிறார். அஜனின் பேரழகும் அவரது பெயரன் இராமபிரானின் பேரழகும் ஒத்தநிலையில் காணப்படுகின்றன.

இராமபிரான் மிதிலைப் பெருநகர் வீதியில் உலாச் சென்றபோது மகளிர் காதல் மயக்கத்தால் தம்மை இழந்த உணர்வினைக் கம்பன் உலாவியற் படலத்தில் பல பாடல்களில் விவரிக்கிறார்.

"விரிந்துவீழ் கூந்தல் பாரார்
மேகலை அற்ற நோக்கார்
சரிந்தபூந் துகில்கள் தாங்கார்
இடைதடு மாறத் தாழார்
நெடுங்கினர் நெருங்கிப் புக்கு
நீங்குமின் நீங்குமின் என்று
அருங்கலம் அனைய மாதர்
தேனுர் அளியின் மொய்த்தார்"

"சொன்னலம் கடந்த காமச்
சுவையை ஓருருவம் ஆக்கி
இன்னலம் தெரிய வல்லார்
எழுதிய தென்ன நின்றாள்
பொன்னையும் பொருவு நீராள்
புனைந்தன எல்லாம் போகத்
தன்னையும் தாங்க லாதாள்
துகிலொன்றும் தாங்கி நின்றாள்"

இத்தகைய இன்னொரு காட்சியினைக் கம்பன் மந்திரப் படலத்திலும் விவரிக்கிறார். சுமந்திரன் இராமபிரானுக்கு முடிசூட்டுகிற தீர்மானத்தை அவரிடம் சொல்லி, தசரதனிடம் அவரை அழைத்து வருகிறார். இராமபிரான் தேரில் அமர்ந்து அரசவீதியில் வருதலைக் கண்ட பெண்களின் நிலை பலவாறு விவரிக்கப்படுகிறது. அதில் ஒரு காட்சி வருமாறு

"நீளெழத் தொடர்வாயிலில் குழையோடு நெகிழ்ந்த
ஆளகத் தினோடரமியத் தலத்தினும் அலர்ந்த
வாளரத் தவேல்வண்டொடு கெண்டைகள் மயங்கச்
சாளரத் தினும்பூத் தனதாமரை மலர்கள்"

(மந்திரப்படலம், 53)

உணர்ச்சியைக் கொட்டுவதில் கம்பனின் திறம் மேலோங்கி நிற்கிறது. பெண்கள் தமக்கே உரிய நாணம் பயிர்ப்பு, மடம் முதலிய உயிரினும் மேலான பண்புகளைக் காதல் வேட்கையால் மீறினர் என்பது கம்பனின் கூற்று (உலாவியற் படலம், 8).

இத்தகைய வருணனைகள் மகளிரின் கற்புக்குக் களங்கமாகத் தோன்றுகின்றன. ஒன்றனை எழிலுற – உணர்ச்சி மழுங்காமல் விவரிக்கிற பேரவாக் காரணமாகக் கவிஞர்கள் தம் பண்பாட்டு மரபினை மறந்துவிடுகின்றனர். கவிதைத் தொழிலின்பால் கொண்ட பேரார்வம் இவை போன்ற வருணனையைத் தவறானது என்று கருத அவர்களுக்கு இடம் தரவில்லை.

இயற்கைக் காட்சிகளை வருணிப்பதிலும் இருபெருங் கவிஞர்களும் ஒருமித்துக் காணப்படுகின்றனர்.

வீட்டுத் தடாகங்கள் தாமரை மலர்களையும் காதற்களிப்பின் ஆசையுடன் நீந்துகிற பறவைகளையும் கொண்டிருந்தன. அதனால் புன் சிரிப்புக் காரணமாக அழகு மிகுகிற முகத்தையும் தளர்ந்த ஒலிக்கிற மேகலையினையும் உடைய பெண்களைப் போன்று அத்தடாகங்கள் விளங்கின.

(சருக்கம் 9, சுலோகம் 37)

காளிதாசன் பெண்களைத் தடாகங்களுக்கு உவமையாகக் கூறுகிறார்.

> தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கம் தாங்கக்
> கொண்டல்கள் முழவின் ஏங்க குவளைகண் விழித்து நோக்க
> தொண்டிரை எழினி காட்ட தேம்பிழி மகர யாழின்
> வண்டுகள் இனிது பாட மருதம் வீற்றிருக்க மாதோ.
>
> (நாட்டுப் படலம், 4)

கம்பன் இப்பாடலில் மருத நிலத்தினை அரசவையில் கொலுவீற்றிருக்கிற அரசியாகக் கற்பனை செய்கிறார்.

இவை போன்ற பல பாடல்கள் இரு காப்பியங்களிலும் உள்ளன. இத்தகைய கற்பனை இந்திய இலக்கிய உலகில் ஒரு மரபாகக் காலந்தோறும் காணப்படுகிறது.

## *சமயநெறி*

வாழ்வியற் கருத்துக்களை விவரிப்பதிலும் காளிதாசனுக்கும் கம்பனுக்கும் இடையே ஒற்றுமை காணப்படுகிறது.

காளிதாசன் காளியின் பக்தர் என்பது செவி வழிச் செய்தி. இதற்கான சான்றினை இரகு வம்சத்தில் காண முடியவில்லை. இக்கவிஞர் பெண்ணொரு பாகனாகிய சிவபெருமானை வணங்கியே தம் காப்பியத்தைத் தொடங்குகிறார். சொல்லும் பொருளும் போன்று ஒன்றியிருப்பவர்களும் உலகத்திற்குத் தந்தையும் தாயுமானவர்களும் ஆகிய பார்வதி பரமேசுவரர்களைச் சொல்லையும் அதன் பொருளையும் அறிதற்காக வணங்குகிறேன். இவ்வாறு இரகுவம்சத்தின் முதலாவது சுலோகம் கூறுகிறது.

இறைவழிபாட்டுப் பாடல் காளிதாசன் ஒரு சிவபக்தர் என்பதையும் சிவன் சக்தி கந்தன் மூவரின் வழிபாடுகளையும் இணைத்துக் கொண்ட சைவக் கொள்கை உடையவர் என்பதையும் வெளிப்படுத்துகிறது. மேலும், இரகு வம்சத்தில் பல சுலோகங்களில் கந்தனாகிய குமரக் கடவுளை மாவீரர்களுக்கு உவமையாகக் கவிஞர் சுட்டிச் சொல்கிறார். கந்தனைப் பலவாறு உவமை வாயிலாகப் போற்றுதல் கந்தனிடம் தாம் கொண்ட ஈடுபாட்டினை உலகுக்குத் தெரியப்படுத்திடக் காளிதாசன் கையாண்ட ஓர் உத்தியாகும். சிவனும் உமாதேவியும் ஆகிய இரு மாபெரும் கடவுள்களின் ஒருங்கிணைந்த சக்தியால் உருவான கடவுளே கந்தன் என்பதனாலும் அசுரர்களாகிய தீய சக்திகளிடமிருந்து உலகைக் காத்திடத் தோன்றியவர் என்பதனாலும் கந்தன் இக்கவிஞரைப் பெரிதும் கவர்ந்துள்ளார். இந்த கவர்ச்சியே கந்தனது பிறப்பு நிகழ்ச்சியை ஒரு பெருங்காப்பியமாகக் குமார சம்பவத்தை இயற்றுமாறு காளிதாசனைத் தூண்டியுள்ளது.

இரகுவம்சம் இராமபிரான் பிறந்த வம்சத்தின் சிறப்புனை வெளிப்படுத்த எழுதப்பெற்றது. இதில் இராமபிரான் தனிப்பெருங்காப்பியத் தலைவனாக ஏற்கப்பெறவில்லை. ஆயினும் அவர் திருமாலின் அவதாரமாகப் போற்றப்படுகிறார். சிறந்த பண்புகளும் நல்லொழுக்கங்களும் சீதையிடம் இணையிலாப் பேரன்பும் கொண்ட புருஷோத்தமராக விவரிக்கப்படுகிறார். பகைவனை அன்புடன் அணுக வேண்டும் என்று சுக்கிரீவனுக்குத் தாம் அறிவுறுத்தியவாறே, போர்க்களத்தில் எதிரில் நின்ற இராவணனை மிகுந்த மரியாதையுடனும் அன்புடனும் நோக்கினர். இவ்வாறெல்லாம் இராமபிரானைக் கவிஞர் விவரிக்கிறார். இத்தகைய விவரிப்பு வைணவக் கடவுளாகிய திருமாலையும் அவர் பெரிதும் மதிக்கிறார் என்பதையே காட்டுகிறது. மேலும், இராமபிரானுக்கு அவர்

தருகிற பெருமதிப்பிலிருந்து இக்காப்பியத்தை அப்பிரானைப் போற்றும் பொருட்டே இயற்றினார் என்பதையும் உணரலாம். இருவேறு கடவுளர்களைப் போற்றும் பொருட்டுத் தனித்தனி இரு பெருங்காப்பியங்களை இயற்றிய காளிதாசன் சமய ஒருமைப்பாட்டுணர்வு மிக்கவராகத் திகழ்கிறார்.

கம்பன் ஒரு சமதர்ம உலகத்தை நிறுவிடப் பேரவாக் கொண்ட குறிக்கோள் கவிஞர். சமூக அமைப்பு, பொருளியல், அரசியல், ஆன்மீகம் என எல்லாத் துறைகளிலும் மாந்தர் அனைவரும் சம உரிமைகளையும் மதிப்புகளையும் பெற்றுச் சகோதரர்களாக வாழ வேண்டும் என்பது அவரது குறிக்கோள்.

கம்பன் இராமபிரானை வழிபடு தெய்வமாக ஏற்றவர். அவரது பெருமையை உலகறியச் செய்யவே தம் காப்பியத்தை இயற்றியவர். வைணவ சமய நெறியைச் சார்ந்து, நாராயண பக்தியைக் காப்பியம் முழுவதிலும் ஆங்காங்கே உணர்த்துகிறவர் எனினும் அவர் ஒரு குறிப்பிட்ட சமயத்தை மற்றவர்மீது திணிக்கிற சமய வெறிக்கு அப்பாற்பட்டவர். இதனைத் தம் காப்பியத்தின் முதற் பாடலிலேயே குறிப்பாக உணர்த்துகிறார். உலகம் யாவையும் தாமுள ஆக்கிலும் என்ற பாடலில் எந்த ஒரு சமயம் சார்ந்த கடவுளின் பெயரையும் அவர் சுட்டிக் காட்ட வில்லை.

கம்பன் வாழ்ந்த காலம் சமயக் காழ்ப்பு நிலவிய காலம். சிவன் பெரியவனா? திருமால் பெரியவனா? என்று சைவமும் வைணவமும் போராடிய காலம் அது. அந்தப் போராட்டத்தைக் கம்பன் விரும்பவில்லை.

இதனை,

அரனதிகன் உலகளந்த அரியதிகன்
என்றுரைக்கும் அறிவி லோர்க்குப்
பரகதிசென் றடைவரிய பரிசேபோல்

என்பது போன்ற பாடல்களின் வழியாக அவர் வெளிப்படுத்துகிறார்.

ஒரு பரம்பொருளே பிரமன், திருமால், சிவன் என மூன்று உருவங்களில் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று செய்கைகள் காரணமாகக் காட்சி அளிக்கிறது. இதனை மூன்றவன் குணங்கள் செய்கை மூன்றவன் உருவம் மூன்று என்று பிரகலாதன் கூற்றாகக் கம்பன் புலப்படுத்துகிறார்.

ஆன்மீக உணர்வு நல்லொழுக்க வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதது என்பது காந்தியடிகள் முதலிய சான்றோரின் அனுபவ மொழி. எனவே ஏதேனும் ஒரு தெய்வத்தை வழிபடு தெய்வமாகக் கொண்டு, பிற தெய்வங்களையும் மதிக்கிற சமய ஒருமைப்பாட்டு உணர்வு மாந்தர் அனைவருக்கும் தேவை. உண்மையாகவும் முழுமையாகவும் ஆன்மீகத்தைத் தெளிந்த யாரும் சமய வெறுப்புக்கு ஆளாகுதல் இல்லை. இத்தகைய சீரிய சமய ஒருமைப்பாட்டுணர்வு மிக்கவர்களாகக் காளிதாசனும் கம்பனும் விளங்குகின்றனர்.

## *அரசியல் நெறி*

ஒரு நாட்டிலுள்ள மக்கள் யாவருக்கும் மன்னனே உயிராகக் கருதப்படுகிறான். அவனது ஆட்சி முறைகளைப் பொறுத்தே மக்களின் அகப்பண்புகளும் புற வொழுக்கங்களாகிய வாழ்வியல் நடைமுறைகளும் அமைகின்றன. மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் என்பது பழங்கால அரசியல் நெறி.

மன்னன் அல்லது ஆளுகிறவர்கள் நாட்டு மக்களுக்கு முன் மாதிரியாக வாழ வேண்டும். அவர்களைப் பொறுத்தே மக்களின் வாழ்வியல் இன்பமாகவோ துன்பமாகவோ அமைதியாகவோ போராட்டக்கலகமாகவோ அமைகிறது. ஆளுகிறவர்களை மிகத் தூய்மையும் தெய்வத் தன்மையும் உடையோராக இந்திய அரசியல் மரபு கருதுகிறது. இதனாலேயே மக்களின் ஒழுக்கத்திற்கு மட்டுமின்றி, மழை, பெரு வெள்ளம், வறட்சி, புயல் முதலிய இயற்கை நிகழ்வுகளுக்கும் ஆளுகிறவர்களே காரணமாகின்றனர் என்ற நம்பிக்கை உருவாகியுள்ளது. இந்த நம்பிக்கையைச் சிலப்பதிகாரத்தில் சேரன் செங்குட்டுவன் வருத்தத்துடன் வெளிப்படுத்துகிறான். அரசுரிமைப் பதவி என்பது ஆடம்பரமாக இன்பத்தை அனுபவிப்பதற்கு உரியது அன்று ; அது பெரிய சுமை என்று கூறுகிறான்.

இந்திய மரபு வழியிலான இத்தகைய அரசியல் நெறிகளைக் காளிதாசனும் கம்பனும் வாய்க்கும் இடந்தோறும் விவரிக்கத் தவறவில்லை. காளிதாசன் இரகுகுல மன்னர்களின் பண்புகளைக் காப்பியத் தொடக்கத்திலேயே விவரிக்கிறார். அம் மன்னர்கள் கல்வியிற் சிறந்த புலமைமிக்கோர். குற்றத்திற்கு ஏற்பத் தண்டனை வழங்கி நீதியை நிலைநாட்டுவர்.

சூரியன் ஆயிரம் மடங்காகத் திரும்பிக் கொடுப்பதற்காகப் பூமியிலுள்ள நீரை எடுக்கிறது. அவ்வாறே திலீபன் என்ற மன்னனும் மக்கள் செல்வச் செழிப்புடன் வாழும் பொருட்டு அவர்களிடமிருந்து வரிகளைப் பெறுகிறான். அவன் சொத்துக்களின் மீது ஆசை அற்றவன். அவன் நாட்டு மக்கள் யாவருக்கும் தந்தையாகவும், மகனாகவும் விளங்கினான்.

மக்கள் மீது மிகக் குறைவான வரிகளை விதிக்க வேண்டும். அவ்வரிப் பணத்தால் நிறைவான நலத்திட்டங்களை உருவாக்கி நிறைவேற்ற வேண்டும். வீண் ஆடம்பரச் செலவு செய்தலோ மிகுதியாக வரிகளை மக்கள் மீது திணித்தலோ சிறந்த ஆட்சியின் இலக்கணம் ஆகாது. இவ்வாறு காளிதாசன் கருதுகிறார்.

இரகுகுல மன்னர்கள் சிறந்த கர்மயோகிகளாகத் திகழ்ந்தனர் என்பதற்கு இராமபிரான் எடுத்துக்காட்டு ஆவார். அவர் இன்பம், துன்பம், பதவி, பதவிபறிப்பு என எல்லாவற்றையும் சமமாகவே நோக்கினார். தந்தை தசரதன் ஆட்சியுரிமையை வழங்கியபோது, அதனை அழுது கொண்டே ஏற்றார். பின்னர்க் காட்டிற்குப் போ என்று ஆணையிட்ட போது அதனை மகிழ்ச்சியுடன் ஏற்றார். மங்களமான பட்டாடைகளை உடுத்தபோதும் மரவுரிகளை உடுத்தபோதும் அவரது முகத்தின் உணர்ச்சி சமநிலையிலேயே இருந்தது. அதனைக் கண்டு மக்கள் வியந்தனர். (சருக்கம் 12, சுலோகம் 7,8)

காளிதாசன் திலீபனின் பண்புகளாக விவரித்த சில செய்திகளைக் கம்பன் தசரதனிடம் சார்த்தி விவரிக்கிறார்.

> “தாயொக்கும் அன்பின் தவமொக்கும் நலம்பயப்பின்
> சேயொக்கும் முன்னின் றொருசெல் கதியுய்க்கும்
> நீரால்” — (அரசியற் படலம்,4)

காளிதாசன் தந்தையை ஒப்பர் இரகுகுலமன்னர் என்று கூறுகிறார். கம்பரோ தாயை ஒப்பர் என்று குறிப்பிடுகிறார். அன்பில் தந்தையினும் தாயே மிக்கவள் என்பது இங்குக் கருதத் தக்கது.

> “வயிரவான் பூணணி மடங்கல் மொய்ம்பினான்
> உயிரெலாம் தன்னுயிர் ஒக்க ஓம்பலால்
> செயிரிலா உலகினில் சென்று நின்றுவாழ்
> உயிரெலாம் உறைவதோர் உடம்பு மாயினான்”
> — (அரசியற் படலம் 10)

மன்னனது ஆணை அவனது நாட்டிலுள்ள அனைத்துயிர்களிடமும் நிறைந்து நின்று ஆட்சி செலுத்துதலோடு, அருளுந்தலையும் உடையது. இதனால் மன்னனையும் இறைவன் என்று குறிப்பிடுவர். ஆனால் கம்பனோ எல்லா உயிர்களும் தங்கி நின்று வாழ்ந்து, பிறவித் துயரைக் கடத்தற்குக் கருவியாக உள்ள உடலுக்கு ஒப்பானவன் என்று தசரத மன்னனைக் காட்டுகிறார்.

அரசுரிமை அளிப்பு, பறிப்பு என்னும் இரு வேறுபட்ட சூழல்களிலும் இராமபிரான் எவ்வித உணர்ச்சி வேறுபாட்டிற்கும் ஆளாகாமல் கருமயோகியாகக் காட்சி அளித்தார் என்பதை,

*அப்பொழு தலர்ந்த செந்தாமரை யினைவென்ற தம்மா*

என்று வியந்து கவிஞர் பாராட்டுகிறார்.

கம்பனது அரசியல் தருமநெறியில் மக்களாட்சி முறை மிகுந்து காணப்படுகிறது. பொருளியல் உள்ளிட்ட எல்லாத் துறைகளிலும் நாட்டு மக்கள் சம உரிமை பெற்றவராகவும் சமமான நுகர்வு உடையோராகவும் திகழ வேண்டும் என்பது அவரது பேரவா. இதனை,

எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ
– (நகரப் படலம் 74)

என்பது போன்ற பாடல்களில் காணலாம்.

## *நிறைவு*

மாந்தர்கள் உலகில் எந்த இடத்தில், எந்தக் காலத்தில், எந்தச் சூழலில் வாழ்ந்தாலும், எண்ணங்களின் ஒருமைப்பாடு அவர்களை ஒரே மாதிரியாகச் சிந்திக்கத் தூண்டுகிறது. காளிதாசனும் கம்பனும் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு சூழல்களில் வாழ்ந்த வெவ்வேறு மொழிகளின் பெருங் கவிஞர்கள். அவர்களது உள்ளம் உலகப் பொது நலத்தை அவாவியது. அந்த அவா கவிதைகளில் ஒருமித்த இயல்புகளாக வெளிப்பட்டுள்ளன.

# சிந்தாமணி கூறும் அறம்

**தி.வே.கோபாலய்யர்**

சென்ற இதழ் தொடர்ச்சி...

## 15. துறவியர்

மக்கள் இனத்தாருள் பெரும்பான்மையினராக வாழும் இல்லறத்தாரின் வாழ்க்கை அறவெற்றிகளைக் குறிப்பிடுவது போலவே சிறுபான்மையினராகி ஆன்மாவின் உயர்வு கருதி வீடு பேற்றுக்கு முயலும் துறவிகளின் வாழ்க்கையற வெற்றி பற்றிக் கூறுவனவும் நோக்குவோம்.

இயற்கையில் காணப்படும் சந்திரன் ஒரு நாள் மறைந்து போகிறது. மறுநாள் பிறக்கிறது. பிறந்த பிறை வளர்கிறது. வளர்ந்து முழுமை பெறுகிறது. பிறகு தேயத் தொடங்குகிறது. இந்தச் சந்திரனைப் பார்த்தாவது இவ்வுடல் இறக்கும் பின் பிறக்கும் சிறிது சிறிதாக வளரும் பின் தேய்ந்து மாயும் என்பதனை உணர வேண்டும் இயற்கையைக் கண் கூடாகப் பார்த்தும் உலக நிலையாமையை உணரும் ஆற்றல் இல்லாதவர்கள் சான்றோர் வழங்கும் உபதேசங்களை கேட்டாவது உலகின் நிலையாமையை உணர்ந்து பிறவிப் பிணியைப் போக்க அரிதின் கிட்டிய இம்மனித உடல் உள்ள போதே வழிதேடாதது பெருந்தீங்கு தருவதாகும்.

"மாய்தலும் பிறத்தலும் வளர்ந்து வீங்கலும்
தேய்தலும் உடைமையைத் திங்கள் செப்புமால் ;
வாய்புகப் பெய்யினும் வழுக்கி நல்லறம்
காய்வது கலதிமைப் பால தாகுமே" — சீவக 2932

மன்னுநீர் மொக்குள் ஒக்கும் மானிடர் இளமை ; இன்பம்
மின்னின் ஒத்து இறக்கும் செல்வம் வெயில் உறுபனியின் நீங்கும்
அன்னதால் வினையின் ஆக்கம் ; அழுங்குவது என்னை என்றாள்;"
— 1544

மானுட யாக்கை கிட்டுதற்கு அரிது. இந்த யாக்கை கிட்டிய போதே செல்வத்தைப் பயன்கொண்டு இளமைக் காலத்தை இன்ப நுகர்ச்சியிலேயே கழித்தல் வேண்டும் என விரும்புகின்றவர் பலரே. இவர்கள் மனிதருடைய இளமைப் பருவம் நீரிற்குமிழி போல் நிலையில்லாதது. இளமை இன்பம் மின்னலை ஒத்து ஒரு கணத்தில் ஒளி நீங்கி இருள் படர்வது. செல்வம் வெயிலைக் கண்ட பனி போல

விரைவில் அழியக் கூடியது என்பதனைச் சற்றும் மனத்துக் கொள்ளாமல் இளமையையும் செல்வத்தையும் அற்பமான அழியக்கூடிய இன்ப நுகர்ச்சிக்காகவே செலவிட்டு வாழ்நாளைப் பாழாக்கிப் பின்னர் இறுதிக்காலத்து மக்கள் யாக்கையில் பெறக்கூடிய பெரும்பயனை இழந்துவிட்டோமே என்று வருந்துவதால் பயனில்லை.

"பேரஞர் இடும்பை எல்லாம் பிளந்திடும் பிறப்பு நீக்கும்
ஆரமிர்து அரிதின் பெற்றாம் அதன்பயன் அறிதல் தேற்றாம்
ஓரும் ஐம்பொறியும் ஓம்பி உளபகல் கழிந்த பின்றைக்
கூர்எரி கவரும்போழ்தில் கூடுமோ? குறித்த எல்லாம்" – 377

துயரங்களை எல்லாம் நீக்குதற்குக் காரணமானதும் பிறவிப்பிணியை அறுப்பதற்குப் பயன்படக் கூடியதும் ஆகிய மக்கள் உடம்பினைப் பண்டைப் பிறப்பில் செய்த தவப் பயனாக பெற்றிருந்தும் அதனைப் பயன்படுத்த அறியாமல் ஐம்பொறிகளையும் ஐம்புலன்களால் பேணி வாழ்நாளை வீழ்நாள் ஆக்கினால் உடம்பின் இறுதிக் காலத்தில் அறம் செய்து உய்வு பெற இயலுமா என்பதனைச் சிந்திக்க வேண்டும்.

"அறிவினால் பெரிய நீரார் அருவினை கழிய நின்ற
நெறியினைக் குறுகி இன்ப நிறைகடல் அகத்து நின்றார்
பொறி எனும் பெயர ஐவாய்ப் பொங்குஅழல் அரவின் கண்ணே
வெறிபுலம் கன்றி நின்றார் வேதனை க்கடலுள் நின்றார்"–375

நல்லறிவுடையவர்கள் சன்மார்க்கத்தைப் பின்பற்றி அநந்த சுகத்தை அடைகிறார்கள். பொறியின்பத்தில் திளைத்தவர்கள் துன்பக்கடலில் தடுமாறுகிறார்கள்.

"கூற்றவன் கொடிய னாகிக் கொலைத் தொழில் கருவி சூழ்ந்து
மாற்றரும் வலையை வைத்தான் வைத்ததை அறிந்து நாமும்
நோற்ற வன் வலையை நீங்கி நுகர்ச்சியில் உலகம் நோக்கி
ஆற்றுறப் போதல் தேற்றாம் அளியமோ பெரியமே காண்" – 376

கூற்றுவன் நம் உயிரைக் கவர ஐம்பொறிகளாகிய வளைகளைப் பரப்பியுள்ளான். அவன் வைத்துள்ள ஐம்பொறிகளாகிய வலைகளில் அகப்படாது தப்பி இதற்கு முன் அனுபவியாத வீட்டின்பத்தை நோக்கிப் பயணம் செய்வதனை அறியாமல் நம் வாழ்நாளை வீழ்நாள் ஆக்குவதிலேயே நாம் பெரியவராகி உள்ளோம்.

"பாற்றுளி பவளநீர் பெருகி ஊன்திரண்டு
ஊற்றுநீர்க் குறும்புழை உய்ந்து போந்தபின்
சேற்றுநீர் குழியுளே அழுந்திச் செல்கதிக்கு
ஆற்றுணாப் பெறாது அழுது அலறி வீழுமே" – 2934

நம் பிறப்பை நினைத்துப் பார்ப்போம். வீடுபேற்றுக்கு முயலுதற்குரிய மனிதப்பிறவியை எடுத்துள்ளோம். நம் மனித உடம்பு எவ்வாறு அமைக்கப் பெற்று இவ்வுலகுக்கு அறிமுகமாகிறது என்பதனை நோக்குவோம். சுக்கிலமும் குருதியும் பெருத்து உடல் அமைய அவ்வுடலைப் பெற்ற ஆன்மா நீர்ஊறும் சிறுவாயிலாலே உலகில் பிறந்து வளர்ந்த பின் அறிவை உடைத்தாய் அறத்தைப் பேணிச் செல்கதிக்கு

நல்வினையாகிய பொதிசோற்றைப் பெறாது போய் நரகத்தே கிடந்து அழுது அலறிப் பின் நரகத்தை நீத்து உலகிற்கு வரும் போதும் மீண்டும் அச்சிறுவாயிலுக்குள்ளே நோய்ட்டிருந்து பிறவித் துயரில் வருந்துவதையே தன் பண்பாகக் கொண்டிருக்கிறதே. இஃது என்ன கொடுமை.

"எரிதலைக் கொண்ட காமத்து இன்பநீர்ப் புள்ளி யற்றால்
பிரிவின்கண் பிறந்த துன்பம் பெருங்கடல் அனையது ஒன்றால்
உருகி நைந்து உடம்பு நீங்கின் இம்மையோடு உம்மை இன்றி
இருதலைப் பயனும் எய்தார் என்றுயாம் கேட்டும் அன்றே"
– 1536

காமத்திடத்துப் புணர்ச்சியால் பெறும் இன்பம் நீர்த்துளியை ஒத்து மிகவும் சிறியது. ஆனால் பிரிவினால் மனத்து ஏற்படும் துன்பம் கடலை ஒத்து அளப்பரியது. இதனை நன்கு உணராமல் பிரிதல் துன்பத்தைப் தாங்காமல் மக்கள் யாக்கை நீங்குமாயின் தன் மக்கள் யாக்கையை இழந்த அந்த ஆன்மா இம்மை மறுமை என்ற இரண்டன் நன்மையையும் இழந்ததாகும்.

"ஒழுக்கமே அன்றித் தங்கள் உள் உணர்வு அழிக்கும் மட்டும்
புழுப்பயில் தேனும் அன்றிப் பிறவற்றின்
விழுப்பயன் இழக்கும் மாந்தர் வெறு விலங்கு என்ப மிக்கார்
பழித்தன ஒழித்தல் சீலம் பார்மிசை யவர்கட்கு அன்றோ" – 2822

நல்லொழுக்கத்தைக் கெடுக்கும் செயல்களில் ஈடுபட்டுக் கள்ளும் தேனும் மாந்திப் புலால் உணவை உட்கொண்டு வீடுபேற்றினை இழக்கும் மாந்தர் யாக்கை பெற்றதற்குரிய பயனை அடையாமையில் மனித உருவில் உலவும் விலங்கு போல்வர். ஆதலின் மனித வாழ்க்கைக்கு நல்லொழுக்கம் இன்றியமையாதது.

"பவழவாய்ச் செறுவு தன்னுள் நித்திலம் பயில வித்திக்
குழவி நாறு எழுந்து காளைக் கொழுங்கதிர் ஈன்று பின்னாக்
கிழவுதான் விளைக்கும் பைங்கூழ்க் கேட்டிரே பிணிசெய் பன்மா
உழவிர்காண் மேயும் சீல வேலி உய்த்திடுமின் என்றான்" – 379

உழவர்களே கருத்தங்கும் பையாகிய வயலிலே முத்துப் போன்ற சுக்கிலத்தை விதைக்கக் குழவி என்ற முளை தோன்றிக் காளை என்ற கதிரை ஈன்று மூப்பு என்ற தானியம் விளையும். அப்பயிரைத் தீவினையாகிய விலங்குகள் மேயாதபடி சீலம் என்ற வேலியிட்டும் பாதுகாத்து முழு விளைச்சலை பயன்படுத்த வேண்டும்.

"காட்சி நன்னிலையில் ஞானக் கதிர்மணிக் கதவு சேர்ந்திப்
பூட்சி சால் ஒழுக்கம் என்னும் வயிரத்தாழ் கொளுவிப் பொல்லா
மாட்சியில் கதிகள் எல்லாம் அடைத்தபின் வரம்பில் இன்பத்
தாட்சியில் உலகம் ஏறத் திறந்தனன் அலர்ந்த தாரான்" – 381

நற்காட்சி என்ற நிலையிலேயே நன்ஞானம் என்னும் கதவைச் சேர்த்தி நல்லொழுக்கமாகிய தாழை இறுகப் பிணைத்துப் பிறவிப் பிணியை விளைக்கும் தீக்கதிகளில் செல்லாத படி அவற்றை நீக்கிய பின் இதற்குமுன் அடையாத வீட்டின்பம் அடையும் வழியை ஆசிரியன் திறந்து வழிகாட்டிச் செலவைப்பான்.

"பேதைமை என்னும் வித்தில் பிறந்துபின் வினைகள் என்னும்
வேதனை மரங்கள் நாறி வேட்கைவேர் வீழ்த்து முற்றிக்
காதலும் களிப்பும் என்னும் கவடுவிட்டு அவலம் பூத்து
மாதுயர் இடும்பை காய்த்து மரணமே கனிந்து நிற்கும்" – 1389

அறியாமை என்னும் வித்தின் இடமாகத் தீவினை என்னும் வேதனை மரங்கள் தோன்றி வளர்ந்து ஆசை என்ற வேரைத் தரையில் ஆழப் பரவ விட்டு மிக வளர்ந்து, பெறாததன் மேல் செல்லும் காமமும்,

பெற்றதன் மேல் செல்லும் களிப்பும் என்னும் கிளைகளைப் பரவச் செய்து அவலத்தைப் பூத்துக் கவலையைக் காய்த்து மரணத்தைத்தருகின்ற கையாற்றினை இவ்வுடம்பு நுகரும்படி பழுத்துத்தந்து மீண்டும் அதே காய்கள் காய்த்துப் பழுக்க அம்மரம் தொடர்ந்து உயிர்வாழும்.

"ஒன்றாய ஊக்க ஏர் பூட்டி யாக்கைச் செறு உழுது
நன்றாய நல்விரதச் செஞ்நெல் வித்தி ஒழுக்கநீர்
குன்றாமல் தான் கொடுத்து ஐம்பொறியின் வேலிகாத்து ஓம்பின்
வென்றார்தம் வீட்டின்பம் விளைக்கும் விண்ணோர் அமுது ஈன்றே"
– 962

பிழைபடாத முயற்சியாகிய ஏரினைப் பூட்டி உடம்பாகிய வயலினைத் தவத்தால் வருந்துவித்து விரதமாகிய செந்நெல்லை விதைத்து நல்லொழுக்கமாகிய நீரை வற்றாமல் பாய்த்தி ஐம்பொறிகளாகிய வேலியைப் புலன்களாகிய பசுக்கள் நீக்கி உள்ளே புகாதபடி பத்திரமாக பாதுகாத்தால் அந்நிலை முதலில் சுவர்க்க இன்பத்தினை தந்து பின் சித்தபரமேட்டிகள் தங்கியிருக்கும் வீட்டின்பத்தை நல்கும்.

இவற்றை மனங்கொண்டு ஆசிரியர் அனுக்கிரகத்தால் உபாத்தியார் வழிகாட்டச் சாதுக்களால் நன்ஞானம் நற்காட்சி நல்லொழுக்கம் என்ற மும்மணிகளைப் போற்றி வாழ்தல் துறவிகளுக்கு வகுக்கப்பட்ட கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமையாகும். இவ்வொழுக்கத்தின் வழி நின்று பிறவிப் பிணியைப் போக்கி சித்தபதம் எய்த முயலுதல் சிறந்த அறவெற்றியாகும்.

"இடையில் வண்புகழ்க் கொடைமை"

இடையீடு இல்லாது தொடர்ந்து உலகில் வழங்கும் புகழுக்கு உரிய கொடைத்தொழில்.

கட்டியங்காரன் இறந்தபின் சீவகனுடைய வீரர்கள் கட்டியங்காரனுடைய அந்தப்புரம் சென்று, அவன் உரிமை மகளிரை அந்தப்புரத்திலிருந்து வெளியேறுமாறு விரட்டத் தொடங்கினர். அம்மகளிரிடையே சிறுகுழந்தைகளை உடையாரும், இளஞ் சூல் உடையாரும், இளையாரும், மூத்தாரும் எனப்பல திறப்பெண்டிர் இருந்தனர். அம்மகளிர் பெறும் புதல்வர் அரச குலம் அன்மையின், அவர்கள் தம் குலத்துக்குப் பகைவர் அன்மையை உளம் கொண்டு

அவர்களுக்குச் சீவகன் ஆறுதல் கூறிக் கட்டியங்காரன் அவர்களுக்கு வழங்கிய உரிமைகளைத் தானும் வழங்குவதாகவும் அவற்றைக் கொண்டு அவர்கள் தத்தம் விருப்பப்படி அங்கேயே தங்கவும், வேற்றூருக்குச் சென்று தங்கவும் வாய்ப்பு அளிப்பதாகவும் கூறி அவர்களையும் ஆதரித்தான்.

"செங்கால் குழவி தழீஇயினார் திங்கள் புக்க நீரார்
அங்கால் முலையின் அரும்பால்வரப் பாயினாரும்
பைங்காசும் முத்தும் பவளத் தொடு பைம்பொன் ஆர்ந்த
பொங்கார் முலையார் திருமுற்றநிறைந்து புக்கார்"–2341

"எம்நுங்கட்கு உள்ளம்? இலங்கு ஈர்வனைக் கையி னீரே!
மன்இங்கு வாழ்வு தருதும் அவற்றானும் வாழ்மின்
பொன்இங்குக் கொண்டு புறம்போகியும் வாழ்மின் என்றான்
வில்நுங்க வீங்கி விழுக்கந்தென நீண்ட தோளான்" – 2347

இதன்கண் "கொடைஅளி செங்கோல் குடியோம்பல் நான்கும் உடையானாம் வேந்தர்க்கு ஒளி" என்றஇலக்கணத்திற்குச் சீவகன் இலக்கியமாய் திகழ்தலை காண்கிறோம்.

சீவகன், தன் வளர்ப்புத் தந்தை கந்துக்கடனுக்கு அவன் வணிகனாதலின், முடிசூடும் அரசாட்சியை அவனுக்கு நல்க முடியாமையால் அவனுக்குக் குறுநில மன்னருக்கு உரிய அரசு அளித்துத் வளர்ப்புத் தாய் சுநந்தைக்கு நன்றாகிய தேவி என்றபட்டத்தை நல்கினான்.

"எத்துணைத் தவம் செய்தான் கொல் என்றெழுந்து உலகம் ஏத்த
வித்திய புகழி னாற்கு விருந்தரசு இயற்றி நாடும்
ஒத்தனன் நல்கித் தன்னை உழந்தனள் வளர்த்த தாய்க்குச்
சித்திரத் தேவிப்பட்டம் திருமகன் நல்கி னானே" – 2567

தன் தம்பி நந்தட்டனுக்கு இளவரசுப் பட்டம் நல்கி, அவனுக்கும் நபுலவிபுலர் என்றதன் தம்பிகளுக்கும் குறு நிலமன்னர் மகளிரை மணம் செய்வித்து அவர்களுக்கு நாடுகளை நல்கினான்.

"இனக்களி யானை மன்னர் இளவுடை யான் என்றுஏத்தத்
தனக்கிளை யானை நாட்டித் தான்தனக்கு என்று கூறிச்
சினக்களி யானை மன்னர் மகளிரைச் சேர்த்தி நம்பன்
மனக்கினிது உறைக என்று வளங்கெழு நாடும் ஈந்தான்"
– 2568

சீவகன் தன் காதல் தோழர் நால்வருக்கும் பழைய அரசு, ஏனாதி மோதிரம், செம்பொன்பட்டம், கண்ணி, நிதியம் என்பனவற்றைவழங்கினான்.

"ஆழ்கடல் வையத்தில்லா வருநிதி அரசு நல்ல
சூழ்மணி ஆழி செம்பொன் சூட்டொடு கண்ணி காதல்
தோழர்கட்கு அருளி" – 2569

என்பது காண்க.

சீவகன் தன்னை வளர்த்த செவிலித்தாயர் ஐவருக்கும் நாடோறும் ஆயிரம் பொன் வருவாய் நல்கும் ஐந்து ஊர்களை வழங்கினான்.

"வளர்த்தகைத்தாயர் தம்மை வருகென அருளித் தங்கள்
கிளைக்கெலாம் சிறப்புச் செய்து கேட்டவர் மருள ஐந்தூர்
விளைத்துள கெடாத வைகல் ஆயிரம் இறுப்புத் தண்டக்
கொளக் கொடுத்து அயா உயிர்த்தான் கொற்றவன் என்பவன்றே"
– 2570

சீவகன் தன் நண்பர்களாய் மந்தியைத் தழுவிக் கொள்ளும் மகப்போலத் தன்கண் பக்தியை விடாதே தன்னொடு பழகிய மன்னர்களுக்கு நிதியமும் களிறும் மாவும் நல்கினான்.

"கைத்தல மந்தி கொண்ட கைம்மகப் போன்று தன்கண்
பத்திமை விடாது மேனாள் படைக்கலம் நவின்றபொற்றேர்
மைத்துன மன்னர்க் கெல்லாம் வளநிதி மணிசெய் மான்தேர்
தத்துநீர் மிசைச்செல் மாவும் தவழ்மதக் களிறும் ஈந்தான்"
–2571

அடுத்த இதழில் தொடரும்...

பதிப்பாசிரியர்

பேராசிரியர். திரு. இரா. சதாசிவம்

## ஆசிரியர் குழு

முனைவர். திரு. தமிழண்ணல்

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

டாக்டர் திரு. ந. சேதுராமன்

முனைவர். திரு. சுப. அண்ணாமலை

முனைவர். திரு. ம.ரா.போ.குருசாமி

முனைவர். திரு. அ.அ.மணவாளன்

முனைவர். திரு. அ. தட்சிணாமூர்த்தி

இராசா. திரு. T.N.S. முருகதாஸ் தீர்த்தபதி

முனைவர். திரு. செ. கந்தசாமி

முனைவர். திரு. க. சின்னப்பா

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, வட்டாட்சியர் நகர், மதுரை-20. ✆ 2532879.
ஆசை அச்சகம், மதுரை. ✆ 26 222 50, 98434-32484

# மதுரைத் தமிழ்ச்சங்க நூற்றாண்டு மலருக்கு

அறிஞர்களே!

புலவர்களே!

சான்றோர்களே!

**தமிழ், தமிழ்ப் பண்பாடு,**
**தமிழ்ச் சமுதாயம், தமிழ்ச்சங்கம்**
மற்றும்
**வள்ளல் பாண்டித்துரைத் தேவர்**
குறித்த கட்டுரைகளை வழங்குவீர்!

தொடர்பு முகவரி


பதிப்பாசிரியர்
செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை – 625 001.
போன் : **(0452)-5575615**

முதல்வர்
செந்தமிழ்க் கல்லூரி,
மதுரை – 625 001.
போன் : **(0452)-2343707**